Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 02 சனிக்கிழமை (16.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 259
















# இராணுவத்தின் காணி சுவீகரிப்பிற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை

(கொழும்பு)

இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்களின் காணிகளை, சுவீகரிப்பதற்கு, இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைக்கு உச்ச நீதிமன்றம் இடைக் காலத் தடைவிதித்துள்ளது.

இரண்டு கிராமவாசிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரித்த பின்னரே உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதன்படி இந்த வழக்கு அடுத்த விசாரணைக்கு வரும்வரை, அதாவது அடுத்த மாதம் 23 ஆம் திகதிவரை இந்த இடைக்காலத் தடை அமுலில் இருக்கும்.

கடந்த டிசம்பர் மாதத்தில் தமது கிராமத்துக்கு வந்த இராணுவத்தினர், அங்கு தாம் முகாம்களை அமைக்கவுள்ளதால், அங்கிருந்து கிராம மக்கள் வெளியேற வேண்டும் என்று கூறியதாக தமது மனுவில் அவர்கள் தெரிவித்துள்ளனர். இராணுவத்தினரின் இந்த உத்தரவை அடுத்து சில கிராமவாசிகள் ஏற்கனவே அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும், இந்த முகாம் காரணமாக சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணையில் கருத்து வெளியிட்ட அரச சட்டவாதி, மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் கடந்த ஒக்டோபர் மாதத்துடன் காலாவதியாகியுள்ளதால், அவற்றை கையகப்படுத்த அரசாங்கத்துக்கு அதிகாரம் உள்ளதாக தெரிவித்தார். அத்துடன் இது குறித்து பிரதிவாதிகளிடம் மேலதிக ஆலோசனைகளைப் பெறுக்கொள்ள கால அவகாசம் வேண்டும் என்றும் அரச சட்டவாதி நீதி மன்றத்தில் தெரிவித்தார். இதற்கமைய வழக்கு விசாரணை அடுத்த மாதம் 23 ஆம திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கியூபா சென்றார் ஜனாதிபதி

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கியூபாவுக்குச் சென்றுள்ளார். அவருடன் மேலும் 35 பேர் கொண்ட தூதுக்குழு ஒன்றும் சென றுள்ளது. இந்த விஜயத்தின்போது, லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்துக்கும், கியூபாவின் ராவுல் ரோவா கார்சியா

19 ஆம் பக்கம் பார்க்க

## கண்டனம்

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரின் வீட்டின் மீது விசமிகள் நடத்திய தாக்குதலைவன் மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை மதிக்கிறது பிரிட்டன் அரசு


(கொழும்பு)

தமது நாட்டுப் பிரஜைகள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமையைப் பிரிட்டன் அரசு மதிப்பதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் சாராமேன் தெரிவித்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைப் பிரித்தானிய சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் தவறிவிட்டதாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய இராச்சிய பிரஜைகளின் ஆர்ப்பாட்டத்திற்கான சட்டபூர்வமான உரிமையை நாம் மதிக்கிறோம். ஆனால், இது பேச்சு சுதந்திரத்திற்கான உரிமையுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தடுக்கத் தவறியதால் அதிருப்தி



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலண்டனுக்கு விஜயம் செய்திருந்தபோது புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் தடுக்கத் தவறிவிட்டதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது


கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பிரித்தானிய மகாராணியின் வைரவிழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலண்டனுக்கு சென்றிருந்த ஜனாதிபதிக்கு எதிராக கடந்த 6 ஆம் திகதி மால்பரோ ஹவுஸ"க்கு முன்பாக புலம்பெயர்ந்த தமிழ் மக்களால் போராட்டம் நடத்தப்பட்ட போது ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இப்போராட்டத்தைத் தடுத்து நிறுத்த அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை

நோர்வே, சுவீடன், பிரான்ஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## பணிப்பாளரின் அறிக்கை குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணை



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து இரும்புக் கேடர்கள் மற்றும் மின்பிறப்பாக்கி என்பன கொண்டு சென்றமை தொடர்பாக, யாழ்.பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி, பணிப்பாளருக்கு வழங்கிய அறிக்கை தொடர்பான விசாரணைகளை இரகசியப் பொலிஸாரும் யாழ்.பொலிஸாரும் இணைந்து மேற்கொள்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான அறிக்கையை யாழ். அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் இரகசியப் பொலிஸாரிடம் சமர்ப்பித்தனர். இதன் தொடர்ச்சியாக அவ்வறிக்கை தொடர்பான விசாரணைகள் கடந்த இரண்டு நாட்களாக அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதோடு மேற்படி அறிக்கையை எப்படிப் பெற்றுக்கொண்டார் என்றும் புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜே.வி.பி. இன் கூட்டம் மீது துப்பாக்கிப் பிரயோகம்
### சம்பவ இடத்தில் இருவர் பலி

அம்பாந்தோட்டைப் பகுதியில் கட்டுவன என்ற இடத்தில் ஜே.வி.பி. நடத்திய கூட்டம் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே அந்தக் கூட்ட்த்தில் உரையாற்றிக்கொண்டிருந்த தருணத்தில் அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி 56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். இச் சம்பவத்தில் இறந்தவர்களில் ஒருவர் பெண்ணெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்டைப் பிரிக்கும் ஏற்பாடு தமிழரசுக் கட்சி யாப்பில் இல்லை என்கிறார் சம்பந்தன்

தமிழரசுக் கட்சியின் யாப்பில் நாட்டை பிரிக்கும் வகையிலான எவ்வித ஏற்பாடுகளும் இல்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.தமிழ் மொழியில் உள்ள தமது கட்சியின் யாப்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது அதில் தவறுகள் இடம்பெற்றுள்ளதென இரா.சம்பந்தன் ஹிந்து பத்திரிகையிடம் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி,

19 ஆம் பக்கம் பார்க்க

## அடிகாயங்களுடன் பெண்ணின் சடலம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் அடிகாயங்களுடன் வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கின்றது. வல்வெட்டித்துறை இந்து தமிழ்க்கலைவன் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் இருந்தே இச்சடலம் நேற்று மதியம் மீட்கப்பட்டிருக்கிறது.

மரணமடைந்தவர் அருணாசலம் சின்னக்கண்டு (வயது-85) என்று அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது. இவரின் மரணம் தொடர்பாக நேற்றுமாலை வரை ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். (116)

## காரைநகர் பாலியல் வல்லுறவு சந்தேகநபரான முஸ்லிமை அடையாளம் காட்டினார் பெண்

காரைநகரில் இளம் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய முஸ்லிம் நபர் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டார். ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றைய தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் பாதிக்கப்பட்ட இளம் பெண் குறித்த நபரை அடையாளம் காட்டினார். நேற்று இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதவான் சபேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மகளிர் அமைப்பைச் சேர்ந்த சுமார் இருநூறு பெண்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# காரைநகர் வலந்தலையில் நன்னீர் குளம் மக்கள் பாவனைக்கு



(காரைநகர்)

காரைநகர் - வலந்தலைப் பகுதிக்கான புதிய குளம் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படும் இந்த நிகழ்வு இப்பகுதி வாழ் மக்களுக்கு பெரும் மகிழ்ச்சி தரும் ஒரு விடயமாகுமென காரைநகர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச அமைப்பாளருமான வி.கண்ணன் தெரிவித்தார்.

இப் புதிய குளத்தை மக்களின் பாவனைக்காக கடந்த புதன்கிழமை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் பால் ஊற்றி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

காரைநகர் - வலந்தலைப் பகுதி ம்க்களின் நீர்த் தேவையை கவனத்தில் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறியும் பல தடவைகள் இப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு எமது மக்கள் நீர்த் தேவைக்காக எதிர் கொள்ளும் சிரமங்களை நேரில் கண்டறிந்ததோடு உரிய கவனத்தில் இக் குளத்தை புனரமைப்புச் செய்து விரைவில் கையளிப்பதாகவும் உறுதியளித்திருந்தனர்.

அதற்கிணங்க புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள இக் குளத்தின் மூலம் எதிர்காலத்தில் இப்பகுதி மக்கள் தமது நீர்த்தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் என் நம்புகிறேன்.

எமது மக்களின் நீர்த் தேவையைக் கவனத்தில் கொண்டு இக் குளத்தைப் புனரமைப்பு செய்து தந்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி மற்றும் மேஜர் சம்பத் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துடன் களபூமி மாவுதனை விவசாயிகளின் நெற்செய்கைக்கான தண்ணீர் பற்றாக்குறையை நீக்கும் வகையில் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, இராண்டாவது குளத்தையும் கடந்த 13 ஆம் திகதி புனரமைப்புச் செய்து விவசாயிகளின் பாவனைக்காக கையளித்திருப்பதையிட்டும் விவசாயிகளின் சார்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் தனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமுறிகண்டியில் மீள்குடியமர்வு

## முல்லை செயலகம் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் எதிர் வரும் 23 ஆம் திகதி ஒரு தொகுதி மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து வவுனியா செட்டிக்குளம் நலன் புரி நிலையத்தில் தங்கியுள்ள இக்கிராம மக்களில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் 4 பேருந்துகளில் இக்கிராம மக்களும் 6 பேருந்துகளில் இவர்களது உடமைகளும் எடுத்துவரப்பட்டு திருமுறிகண்டி வித்தியாலயத்தில் தங்கவைக்கப்படவுள்ளனர்.

அதன் பின்னர் குடும்ப பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சொந்தக் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர்.

இவர்களுக்கு எதிர்வரும் 23,24,25 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் சமைத்த உணவுகள் வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (04)

# சிறுவர் நீதிமன்ற அமர்வுகள் திங்கள் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் தொடர்பான வழக்குகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் குருநகர் சிறுவர் நீதிமன்றில் நடைபெறுமென யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா சிறுவர் நீதிமன்றத்தின் மேலதிக நீதிபதியாக கடமையாற்றிய வேளை தனது பொறுப்புக்கள் அல[illegible]தினையும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதியிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கவுள்ளார்.

யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி தலைமையில் காலை 9.30 மணிக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய சகல வழக்குகளையும் சிறுவர் நீதிமன்றில் மேற்கொள்ளவுள்ளதால் சகல நீதிபதிகளையும், சட்டத்தரணிகளையும் நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிறுவர் தொடர்பான வழக்குகள் ஏற்கனவே சிறுவர் நீதிமன்றுகு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# வரட்சியின் பிடியில் மண்டைதீவு சுத்தமான குடிநீர் அங்கு முயற்கொம்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராம மக்களுக்கான குடிநீர் விநியோகம் சீரின்மை காரணமாக அக்கிராம மக்கள் குடிநீர் பெறுவதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது கோடை வெயில் அதிகமாயிருக்கும் நிலையில் அந்தக் கிராமத்திற்கான குடிநீரின் தேவையும் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே மண்டைதீவு கிராமத்திற்கு அல்லைப்பிட்டியிலிருந்து குழாய் மூலமாக குடிநீர் கொண்டுவரும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

இருந்தும் அந்த நீர்விநியோகம் அப்பகுதி மக்களின் தேவைக்கு போதுமானதாக இல்லை. அத்துடன் இடையிடையே தடைப் பட்டும் வருகிறது.

இதனால் அந்தப் பகுதி மக்கள் தமக்குத் தேவையான குடிநீரினைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மண்டைதீவு கிராமத்தின் ஒரு பகுதியில் (8 ஆம் வட்டாரம்) நன்னீர் கிணறுகள் சில இருக்கின்ற போதும் அதிலிருந்து குடிநீர் எடுத்துவர சில கிலோமீற்றர் தூரம் சென்றே மக்கள் பெற வேண்டியுள்ளது.

அவ்வாறு கிணற்றிலிருந்து நீர் பெறப்படும்போது நீரும் வற்றி விடும் சூழ்நிலையும் எற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை, அங்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் நீர்த் தொட்டிகள்



அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதுவும் ஒருநாளைக்கு ஒரு தடவையே விநியோகிக்கப்படுகிறது.

அத்துடன் சில குடும்பங்களுக்கு தனியாகவும் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# விழிப்புணர்வு கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் ஆதரவுடன் வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தினால் கட்டிளம் பருவத்தினரின் செழிப்பான எதிர்காலத்திற்கான வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யுவதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை குடும்பநல மேற்பார்வை உத்தியோகத்தர் ரி.வசந்தாதேவியும் இளவயதில் திருமணம் செய்வதால் பெண்களின் சுகாதாரத்தில் ஏற்படும் தாக்கம் என்னும் விடயம் பற்றி யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமகள் சிவசங்கரும் வாழக்கைத்திறன் அபிவிருத்தி தொடர்பாக திறன் அபிவிருத்தி உதவியாளர் வே.பீஷ்மனும் கருத்துரைகளை வழங்கினார்கள்.

இக் கருத்தரங்கில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதுடன் பயிற்சியின் இறுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தமது சந்தேகங்களுக்கான கேள்விகளை கேட்டு தமது சந்தேகங்களையும் தீர்த்துக் கொண்டார்கள்.

# மடம் வீதி கோஷ்டி மோதல் வழக்கு; பள்ளி மாணவர் இருவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மடம் வீதி வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் இருவரை பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி மடம் வீதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் வாள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுடன் 4 பாடசாலை மாணவர்களும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மாணவர்கள் இருவரும் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் உயர்தர பரீட்சைக்கு பாடசாலை மூலம் முதன்முறையாக விண்ணப்பித்துள்ளதாக மாணவர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மு.ரெமீடியஸ் யாழ். நீதவான் நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி பிணை மனுவினை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா முதன் முறையாக உயர்தர பரீட்சை எடுக்கவிருக்கும் காரணத்தினால் இரு மாணவர்களையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார்.

அதேவேளை மற்றைய இரு மாணவர்களும் இரண்டாம் தடவையாக உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள காரணத்தினால் இருவரதும் பிணை மனுவை பரிசீலனை செய்து எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)


**சிறு விளம்பரம்**

## வீடு விற்பனை

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனும் கூடிய நல்ல சுற்றாடலில் உள்ள ஒரு நடுத்தர வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.சீவறட்ணம், றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/138)





வடமாகாண கலாசார திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மறறும் கலாசார திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: நந்தகுமார்)

# தெல்லிப்பளையில் புற்றுநோய் வைத்தியசாலை 200 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண புற்றுநோயாளர்களுக்கான விடுதியுடன் கூடிய புற்றுநோய் வைத்தியசாலையை தெல்லிப்பளையில் அமைப்பதற்கான வேலைகள் துரித கதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலேர்ஸ் ஒவ் கறேஜ் நிதியத்தின் பிரதிநிதி கிருஷ்ணசல்கர் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இவ்வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

மேற்படி நிதியத்தினால் கடந்த வருடம் நடைபவனித் திட்டம் மூலம் புற்றுநோயாளர்களுக்கான வைத்தியசாலையை தெல்லிப்பளையில் அமைக்கவும், யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுவர் புற்றுநோய் விடுதியை அமைக்கவும் நிதி திரட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் 200 மில்லியன் ரூபாய்களை இந்நிறுவனம் நிதியாகச் சேகரித்தது. இந்நிதியைக் கொண்டே மேற்படி கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்குரிய அமைச்சரவை அனுமதி மற்றும் ஜனாதிபதி செயலணிக் குழுவின் அனுமதி என்பன பெறப்பட்டு சுகாதார அமைச்சுடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனவும், இந்த ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யக் கேள்வி கோரப்பட்டுள்ளதுடன், ஜூலை மாதம் 27 ஆம் திகதி இவ்வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி இவ்வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த வேலைகள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளதாகவும், முதலில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்குரிய ஆண்கள், பெண்களுக்குரிய விடுதிகள் அமைத்தல், இரண்டாவதாக சிறுவர் புற்றுநோய் சிகிச்சை விடுதி அமைத்தல், மூன்றாவதாக புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கதிரியக்கப் பிரிவு கட்டப்பட வுள்ளது.

இக் கட்டுமாணப் பணிகள் யாவும் 18 மாத காலத்திற்குள் பூர்த்தியாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், புற்றுநோய் சிகிச்சை நிபுணர்களான டாக்டர் என்.ஜெயக்குமரன் மற்றும் டாக்டர் ஆர்.கிரிஷாந்தி, தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் கலேர்ஸ் ஒவ் கறேஜ் நிதியப் பிரதிநிதி கிருஷ்ணசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இளைஞர், யுவதிகளுக்கான கணினி, தையல் பயிற்சிகள்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில் பாடசாலை கல்வியை முடிதது வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கான கணினி மற்றும் தையல் பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை பளை முள்ளியடியில் உள்ள அபிவிருத்திப் பேரவைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதுபோன்ற பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (11)

# பயங்கரவாதி என கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தால் விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார். முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த செய்யது முகம்மது முத்துராசா மொகமட் லியூபின் (வயது 34) என்பவர் கொழும்பு, கிராண்பாஸில் வைத்து 01.06.2007 இல் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யபபட்டார்.

இவருக்கெதிராக குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சான்றாக இருந்தது.

கடந்த மாதம் 09 ஆம் திகதி இவ்வழக்கு யாழ். மேல் நீதிமனறத்தில் விசாரணைக்கு எடுககப்பட்ட போது நீதிபதி ஜெ.விஸ்வநாதனால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டிருந்தது. எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் உள்ளன என்பதை ஆராயும் பொருட்டு நேற்று முன்தினம் வழக்கு விசாணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வேறு சான்றுகள் எதிரிக்கெதிராக இல்லை என அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டதை யடுத்து நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிக்கு வேறு வழக்குகள் கொழும்பு, அனுராதபுரம், சதுலிய மேல் நீதிமன்றங்களில் உள்ளதால் அவர் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். (137)

# குருநகர் பகுதி உணவகங்களில் பழுதடைந்த சிற்றுண்டிகள் விற்பனை

(குருநகர்)

குருநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள தேநீர் மற்றும் உணவுக் கடைகளை சுகாதாரப் பிரிவினர் பார்வையிடுவது இல்லையா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அப்பகுதிக் கடைகளில் தயார் செய்யும் றோல், கொத்து மற்றும் இறைச்சி றொட்டிகளுக்கு நாளடைந்த இறைச்சி வகைகளைப் பயன்படுத்துவதாகவும் பாவனையாளர்கள் புகார் கூறுகின்றனர்.

கடலுணவுகளான கணவாய், நண்டு, இறால் கறிகள் கூட இரண்டொரு நாட்கள் விற்பனை போகாமல் கிடந்தால் சம்சா, றோல் போன்றவைகளாக மாற்றம் செய்து, பணம் சம்பாதிக்கும் காரியங்களில் கடைக்காரர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிககப்படுகிறது.

அவ்வாறான உணவுப் பொருட்களை வாங்கி வீடுகளுக்குக் கொண்டு சென்று சாப்பாட்டுக்கு எடுக்கையில் நாளடைந்த கடலுணவு, இறைச்சி வகைகளின் நாற்றம் வருவதால் உட்கொள்ளாமல் வீசவேண்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் பகுதிகளில் இயங்கும் தேநீர் மற்றும் உணவுக் கடைகளை சுகாதாரப் பிரிவினர் அடிக்கடி சோதனைக்குட்படுத்தி பாவனைக்கு உதவாத உணவுப் பதார்த்தங்களைக் கண்டறிந்து நீக்குவதுடன், சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (68)

# மனித உரிமை பாதுகாவலர்களுக்கு முல்லைத்தீவில் பயிற்சிப் பட்டறை

(முல்லைத்தீவு)

வன்னி மாவட்ட மனித உரிமைகள் பாதுகாவலர் பேரவையில் அங்கம் வகிக்கும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 11 மணி முதல் 3 மணி வரை நடாத்தப்பட்டது.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் இப்பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இப பயிற்சிப் பட்டறையில் பால், பால்நிலை தொடர்பான விளக்கங்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற வன்முறைகளை எவ்வாறு இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் பேரவையில் அங்கம் வகிக்கும் மனித உரிமை பாதுகாவலர்கள் கலந்து கொண்டனர். (04)

# வசந்தபுரம் கிராமத்தில் மக்களை மீள்குடியேற்ற ஏற்பாடு

(கிளிநொச்சி)

வசந்தபுரம் பகுதியில் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு திருமுறிகண்டி பாடசாலையில் நடைபெற்றது.

இதில் ஆனந்தகுமாரசாமி மற்றும் கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இக்கிராம மக்களான 46 குடும்பங்களை இராணுவத்தினர் இங்கு அழைத்து வந்தனர்.

இதில் 571 ஆவது படைப்பிரிவில் கட்டளை அதிகாரி, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், நாமல் ராஜபக்ஷவின் பிரதிநிதிகள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மேற்படி பிரதேசங்கள் பாதுகாப்பற்றதாக இருந்தமையாலேயே மக்களை உடனடியாக மீள்குடியேற்ற முடியாது போனதாக தெரிவிககப்பட்டது.

எனினும், தற்போது முதற்கட்டமாக எதிர்வரும் 23 ஆம் திகதி ஒரு தொகுதி மக்கள் இங்கு மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (77)

# 2013 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல் கோரல்

(பருத்தித்துறை)

2013 ஆம் ஆண்டுக்கான சகல தேசிய பாடசாலை மற்றும் மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் தேவைகள் தொடர்பான விண்ணப்பக் கோரல்கள் பாடசாலைகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகள் தரம் 6, 7, 8, 9 ஆம் வகுப்புக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பாடநூல்களை மீள் பாவனைக்கு பயன்படுத்தப்படவேண்டும். ஏனயை வகுப்புக்களுக்கு குறிப்பாக தரம் 1- 5 வரையும் 10 - 11 தரங்களுக்கும் புதிய பாடத்திற்கு அமைவாக நூல்கள் வழங்கப்படவுள்ளன.

புதிதாக வழங்கப்படவுள்ள ஒரு சில பாடநூல்கள் பகுதி -I, பகுதி II, பகுதி III என பிரிக்கப்பட்டுள்ளதாக மாணவர்களின் விபரங்களை 3 பிரிவுகளாகப் பிரித்துக் கோரப்பட வேண்டும்.

முக்கியமாக 2012 ஆம் ஆண்டு தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தரம் 6 இற்குச் செல்லும்போது அம்மாணவர்களுக்கு புதிய நூல்களை வழங்குவதற்கு ஏதுவாக அப்பாடசாலைகளும் நூல்களைக் கோரவேண்டும்.

மேலும் தரம் 6 இற்கு ஆங்கில மொழி மூலம் கற்பித்தலை நடத்துகின்ற பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் ஆங்கில மொழி மூலம் கற்கவுள்ள மாணவர்களுக்கு மட்டுமல்ல வேறு பாடசாலைகளிலிருந்து புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கும் சேர்த்து நூல்களை கோரவேண்டும்.

'பாடசாலைகள் இலவச பாடநூல்களுக்கான கோரல்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளருக்கு நேரடியாக ஒரு பிரதியையும் மற்றும் தத்தமது வலய கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு பிறிதொரு பிரதியையும் அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம்
ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம். -பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## அவர்களின் உதவியும் இவர்களின் பதவியும்!

முப்பதாண்டுகளாகத் தொலைத்த வாழ்வு இன்னும் முழுதாக மீளவில்லை. குந்தக் குடிலற்று, நல்ல உடுதுணிகள் அற்று, வேலைவாய்ப்புகள் அற்று, சிறார்க்குத் தகுந்த கல்வி வழங்க வசதியற்று, ஊனங்களுடனும், உறக்கமற்ற இரவுகளுடனும் இன்னும் ஏராளம் தமிழ் மக்கள் ஏக்கத்துடனிருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்து வசதிபடைத்த நாடுகளுக்குச் செல்ல முடிந்தவர்களும், அவர்கள் அனுப்பும் பணத்தில் உண்டு ஏப்பம் விட்டுவிட்டு இங்கு அரசியல் பேசுபவர்களும், கஷ்டங்களிலிருந்து 'சுழிக்க'த் தெரிந்த மேட்டுக்குடியினரும் புளிப்புக் கதைகளைப் பேசியபடி, இங்கே அல்லல்படும் மக்களைத் தொடர்ந்தும் வதைகளுடனேயே அவதியுற விட்டு அதைத் தமிழ்வீரம் தமிழ்ரோசம் என்பதாய்ப் பேய்க்காட்டி வருகிறார்கள்.

மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேசப் போவதாகவும், வெளிநாடுகளின் மூலம் அரசை இணங்க வைக்கப் போவதாகவும் போன தேர்தலில் மக்களுக்கு வாக்குறுதியளித்து வாக்குகளை வாங்கிச் சென்றவர்கள், பேச்சுவார்த்தை – தீர்வு பற்றிய எந்த முன்முயற்சிகளுமின்றி கம்மென்றிருக்கிறார்கள். அந்த முயற்சிகளை அரசு செய்ய வேண்டும் அல்லது ஹிலாரியோ பான் கீ மூனோதான் யோசித்துச் செய்ய வேண்டுமே தவிர, இவர்களது கடமை அந்த முயற்சிகளுக்கு மறுப்பைச் சொல்லிக் கொண்டிருப்பதுதான் அல்லது இந்த அரசு சரிவராது என்ற கண்டுபிடிப்பை சொல்லிவிட்டுப் பேசாமலிருப்பதுதான் என்றொரு வாலாயத்தை ஏமாந்த தமிழ் மக்களிடம் உருவாக்கிவிட்டார்கள்.

இனி வடக்கிற்கோ கிழக்கிற்கோ மாகாண தேர்தலை அறிவித்தால்தான், சுறுசுறுப்படைந்து அதே பழைய வசனங்களுடன் ஊரூராய் வரப் போகிறார்கள். தீர்வு சரிவராது, அதாவது சமஷ்டி, சுயநிர்ணயத்துக்கெல்லாம் அவர்கள் சரிவர மாட்டார்கள், ஆகவே மக்களே மேலும் கஷ்டப்படுங்கள், சுடச் சுடத்தான் தங்கம் மெருகு பெறும்... அப்படியே சர்வதேச நெருக்குதலில் தீர்வும் வரும் என்றவாறாக உணர்ச்சிகரக் கதைகளுடன் களமிறங்குவார்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் எந்த முடிவும் சொல்லாமல், வேறு பேச்சுப் பேசுவதற்கும் ஒரு முனைப்பும் எடுக்காமல் (அதுக்கு முயற்சி எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பெல்லோ... அவர்களுக்குத்தானே நோவும் வலியும்!) இப்படி இழுத்துக்கொண்டே அடுத்த தேர்தலுக்குப் போய்விட்டால் போதும் என்பதைத் தவிர இவர்கள் நினைப்பில் வேறொன்றுமில்லை.

உண்மையில், நடைமுறைச் சாத்தியங்களை உணர்ந்து பேச வேண்டியதும் அதனால் பிரச்சினைகள் தீர வேண்டியதும் சாதாரண தமிழ் மக்களுக்கான அவசரமும் வலியுமே தவிர, ஒபாமா, மன்மோகன், பான் கீ மூன் மற்றுமற்றுமுள்ள உலக–உள்நாட்டுத் தலைவர்களைப் போலவே இவர்களுக்கும் ஒரு அவசரமுமில்லை. எனவே, பழியை யார் யாரிலோ போட்டுவிட்டு, அடுத்த தேர்தலுக்குக் காத்திருக்கிறார்கள்.

வாக்குகளுக்காக மக்களுக்கு உணர்ச்சியேற்றுவதற்கு எப்போதும் போல கைவசம் கதைகள் ரெடியாகவே உள்ளன. எனவே மக்களின் கேள்விகளைச் செவியில் வாங்க வேண்டிய கவலையே இல்லை. இராணுவம் இன்னும் நிலைகொண்டிருக்கிறது, முகாம்களும் உள்ளன, அதற்குக் காணிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஆங்காங்கே புத்தர் சிலைகளையும் வைத்துக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்...

இவ்வளவு உதவிகளை அவர்கள் செய்துகொண்டிருந்தால் போதாதா? இன்னும் எத்தனை தேர்தல்களுக்கு வேண்டுமானாலும் இவற்றை ஆக்ரோசமுடன் கண்டித்து முழங்கியபடி வாக்குகளைக் கறந்து கொண்டிருக்கலாமே! - ஆசிரியர்

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த தயாராகவுள்ளது ரஷ்யா

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கு, புலிகளை ஒழிப்தை விட மாற்றுவழி எதுவும் இருக்கவில்லை. இதை இலங்கைத் தலைவர்கள் சரிவர நிறைவேற்றினர், புலிகளை ஒழிக்கத் தங்களால் ஆன அனைத்து முயற்சிகளை மேற்கொண்டதுடன், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் அதிகளவு குறைத்துள்ளனர் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மில்ஹேவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய குடியரசு தினத்தை முன்னிட்டு காலிமுகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்ற வைபத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார். தனது 4 வருட கால சேவையை பூர்த்தி செய்துள்ள இத்தருவாயில், 2008 இல் தான் இலங்கையில் பதவியேற்கும் போது பயங்கரவாதிகளின் தாககுதல் ஒரு பொதுவான விடயமாகவே இங்கு காணப்பட்டதாக தெரிவித்தார்.

பல அப்பாவி மக்கள் புலிகளால் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்படுவதை தான் கண்கூடாக பல வீடியோக்கள் மூலம் கண்டிருப்பதாகவும் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து தப்ப முயற்சித்த பொதுமக்களை ஆயுதம் தாங்கிய புலிகள் சுட்டுக்கொன்றதாகவும், அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், தேசிய நல்லிணக்கத்தை இலங்கையில் ஏற்படுத்த ரஷ்ய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், இலங்கையை ரஷ்யா நட்புறவு நாடாக பார்ப்பதாகவும், இலங்கைக்கு எப்போதும் ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையும் ரஷ்யாவும் வர்த்தகம், விமான சேவை மற்றும் கலாசார விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதுடன், கடந்த 3 வருடகாலங்களில் இருதரப்பு வர்த்தக உறவுகளில் 80%மான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிரேஷ்ட அமைச்சர் டீ.ஈ.டபில்யூ குணசேகர கருத்து தெரிவிக்கையில், ரஷ்யா இலங்கைக்கையின் பக்கம் எப்போதும் சார்ந்து இருப்பதாகவும், இலங்கை மாணவர்களுக்கு அதிகளவு கல்வித்துறை சார் வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சர் ரஞ்சித சேனாரத்தின, பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி உட்பட பலர் கலந்துக்கொண்டிருந்தனர்.

## குண்டசாலை விமான நிலையம் விவசாயக் கல்வியை பாதிக்கும்

(கொழும்பு)

குண்டசாலையிலுள்ள விவசாயக் கல்லூரியை மூடிவிட்டு, அந்த இடத்தைச் சர்வதேச விமான நிலையமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக மாணவர் சங்கங்கள் நேற்றுமுன்தினம் குற்றம் சுமத்தின. இந்நடவடிக்கையானது, நாட்டின் விவசாயக் கல்வியை கடுமையாகப் பாதிக்கும் என அச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விவசாய கல்லூரி வளாகத்தில் திட்டமிடல் நடவடிக்கைகளை மே 8 ஆம் திகதி அதிகாரிகள் ஆரம்பித்ததாகவும் விமான நிலையத்திற்கான அடிககல் இம்மாதம் நாடடப்படவுளளதாகவும் சோஷலிச மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

இது இலங்கையில் உள்ள 12 விவசாயக் கல்லூரிகளில் ஒனறெனவும் ஆனால் தற்போது 5 விவசாய கல்லூரிகள் மாத்திரமே இயங்குவதாகவும் மேற்படி மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

குண்டசாலையிலுள்ள விவசாயக் கல்லூரி 100 வருடங்களுக்கு மேல் பழைமையானது. விவசாய நிபுணத்துவம் கொண்ட 91 தொகுதி மாணவர்களை அது தோற்றுவித்துள்ளது. நாட்டின் விவசாயத்துறைக்கு இக்கல்லூரி அவசியமாகும் என அவர் கூறினார்.

மூன்று மொழிகளிலும் இரு வருடகால டிப்ளோமா பாடநெறியை வழங்குவதால் இக் கல்லூரி தனித்துவமிக்கது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில் மேலும் பல இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படும்

கொழும்பில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்த வேணடிய இடங்கள் தொடர்பில் தேவையான தகவல்கள் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிற்கு பிரவேசிக்கும் சந்திகளில் இதுவரையிலும் நூறுக்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கையிலும் கொழும்பில் செயற்படுத்தும் பட்சத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்ய முடியும் என பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கண்காணிப்புக் கமராக்களை தொடர்ந்தும் பொருத்த வேண்டிய இடங்கள் தொடர்பில் பொலிஸார் மேலும் அவதானமாக செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## மலேசியாவில் திருட்டு; இலங்கையருக்கு சிறை

மலேசிய கடைத் தொகுதி ஒன்றில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவருக்கு 800 மலேசிய ரூபாய்களை அபராதமாக செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மலேசியா, கோலாலம்பூர் நீதிமன்றமே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இவர் கடந்த 3ஆம் திகதி கடைத் தொகுதி ஒன்றில் சேட் மற்றும் காற்சட்டைகளை திருடியதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் உதித்நாராயண்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் இசை இரசிகர்களைக் கவர்ந்த இந்தியாவின் பிரபல பாடகர் உதித்நாராயணண் நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்தார்.

மாபெரும் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காகவே அவர் இலங்கைக்கு வந்துள்ளார்.

உதித்நாராயணண் உள்ளிட்ட குழுவினர் நேற்று அதிகாலை 5.25 அளவில் கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

தமிழ், ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் பாடும் திறமையைக் கொண்ட உதித்நாராயண் பங்குபற்றும் . இசை நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு சீ.எச் அன்ட் எப்.சி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## பரிசளிப்பு விழா

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல துறை போட்டியிலும் வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச 64 ஆவது பிரிகேடியர் பன்னன்பல கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக துணுக்காய் கல்வி வலய பணிப்பாளர் திருமதி மினிஸ்ரன் மாலினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஐரோப்பிய தேர்தல்கள்: உணர்த்துவது என்ன?

- இம்மானுவேல் பிரபு

ஐரோப்பிய யூனியன் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் சூழலில் பிரான்ஸ், கிரீஸ், ஸ்லோவாகியா ஆகிய நாடுகளில் தேர் தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளாக நிலவும் பொருளாதார வீழ்ச்சி அல்லது மந்தநிலை, ஏறத்தாழ அனைத்து நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதித்து வருகிறது. ஸ்பெயின், இத்தாலி, போர்த்துக்கல் போன்ற நாடுகள் கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. கிரீஸின் பொருளாதாரமோ வாழ்வா சாவா நிலையில் இருக்கிறது.

வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நெருக்கடியைச் சமாளிக்க இந்நாடுகள் எடுத்த சிக்கன நடவடிக்கைகள் பிரச்சினையின் தீவிரத்தை அதிகப் படுத்தியிருக்கிறதே தவிர, குறைக்கவில்லை. சமூக நலத் திட்டங்கள் தொடர்ந்து இரத்து செய்யப்பட்டு வரு கின்றன. மானியங்கள் குறைக்கப்படுகின்றன. விளைவு? பொது மக்களின் கோபம் ஆளுங்கட்சி களுக்கு எதிராகத் திரும்பியுள்ளது.

### 1) பிரான்ஸ்: திரு. பந்தாவை வீழ்த்திய திரு. சாதாரணம்

ஏப்ரல் 2012இல் பிரான்ஸில் நடைபெற்ற தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 4.4 கோடி. பொப்பியுலர் மூவ்மெண்ட் கட்சியின் ஜனாதிபதியான சர்கோசி, சோஷலிஸ்ட் கட்சியின் ஹோலண்டே உட்பட பத்து வேட்பாளர்கள் போட்டியிட்டனர். முதல் கட்ட தேர்தலில், சர்கோசி 27.1 வீத வாக்குகளும் ஹோலண்டே 28.5 வீத வாக்குகளும் பெற்றனர்.

பிரெஞ்ச் தேர்தல் சட்டப்படி ஐம்பது சதவிகிதத்துக்கு மேல் வாக்குகள் பெறுபவரே ஜனாதிபதியாக முடியும். அதனால் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றவர்களின் ஆதரவாளர்களை இணைத்துக்கொள்வதில் இந்த இரு வேட்பாளர்களும் மும்முரமாக ஈடுபட்டனர். இறுதி வெற்றி, ஹோலண்டேவுக்கே. பொதுவாக வலதுசாரிகளுக்கு ஆதரவளிக்கும் நடுநிலை வாதிகள்கூட இந்த முறை இடதுசாரியான ஹோலண்டேவுக்கே வாக்களித்திருக்கிறார்கள். இறுதிக்கட்ட வாக் குப் பதிவின் முடிவில் ஹோலண்டே 51.9 வீத வாக்குகளையும் சர்கோசி 48.1 வீத வாக்குகளையும் பெற்றனர்.

ஹோலண்டேவுக்கு நிச்சயம் இது சுகமான பதவி அல்ல. பட்ஜெட் பற்றாக்குறை கட்டுப்பாட்டை மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. பென்ஷன் திட்டங்கள், சுகாதாரத் திட்டங்கள் உட்பட சமூக நலத் திட்டங்களைத் தொடர்ந்து அமுல்படுத்த முடியவில்லை. இத்தனை சிக்கல்களிலிருந்தும் நாட்டையும் மக்களையும் அவர் மீட்டெடுப்பாரா?

சர்கோசியின் படாடோபமான அரசியலும் அடாவடித்தனமான நடவடிக்கைகளும் மக்களிடையே ஏற்படுத்திய வெறுப்புணர்வின் வெளிப்பாடே ஹோலண்டேவுக்குக் கிடைத்த இந்த வெற்றி.



ஜனாதிபதியான பிறகு ஹோலண்டே முதலில் செய்தது, ஜேர்மனியின் சான்சிலர் ஏஞ்செலா மெர்கலைச் சந்தித்ததுதான். ஒரு வகையில், பிரான்ஸின் எதிர்காலம் மட்டுமல்ல ஐரோப்பாவின் எதிர்காலம் கூட இந்த இரு தலைவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டைப் பொறுத்தே இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்.

சிக்கல் என்னவென்றால், இருவரும் எதிரெதிர் துரு வங்கள். தேர்தல் சமயத்தில் மெர்கல், சர்கோசிக்குத் தன் வெளிப்படையான ஆதரவை வழங்கியவர். ஹோலண்டே தேர்தலுக்கு முன்பிருந்தே மெர்கலை எதிர்த்து வந்தவர். ஐரோப்பிய யூனியனின் பொருளாதாரத்தை நெறிப்படுத்த மெர்கல் முன்வைத்த உடன்படிக்கையில் சர்கோசி கையெழுத்திட்டிருந்தார்.பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளும்கூட இதனை ஏற்றிருந்தன. ஆனால், ஹோலண்டே அதில் சில மாற்றங்களைக் கொண்டுவர விரும்புகிறார். ஒரு வார்த்தையைக் கூட மாற்றமுடியாது என்கிறார் மெர்கெல்.

ஐரோப்பிய நாடுகள் சிக்கன நடவடிக்கைகளை அதிகப் படுத்த வேண்டும் என்பது ஜேர்மனியின் வாதம். பிரான்ஸ், சிக்கன நடவடிக்கைகளுக்கு மாற்றாக வேறு சில திட்டங்களை முன்வைக்கிறது. உதாரணத்துக்கு, வேலை வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும், பொரு ளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும், சமூகத் திட்டங்களுக்கு அதிகம் செலவழிக்கவேண்டும். கார்ப்பரேட் நிறுவனங்களை அல்ல, மக்களை மீட்டெடுக்கவேண்டும். இந்த மாற்றங்கள் செய்யப்படும்வரை, ஹோலண்டே மெர்கெலின் திட்டத்தை ஏற்கப்போவதில்லை.

இது போக, ஹோலண்டே, தான் கொடுத்த வேறு சில வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றப் போகிறார் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### 2. கிரீஸ்: தேர்தல் முடிவுகளும் திவால் அச்சங்களும்

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாத கடந்த அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து கிரீஸில் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது கிரீஸ். நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் சிக்கன நடவடிக்கைகள் மூலம் கிரேக்க அரசாங்கம் 15 பில்லியன் அமெ ரிக்க டொலர் பணத்தைச் சேமிக்க வேண்டும்.

சமீபத்தில் 130 பில்லியன் யூரோ கடனை ஐ.எம்.எ்.ப். அளித்துள்ளது. ஏற்கெனவே 2010இல் அது அளித்த 110 பில்லியன் யூரோ, தனியார் முதலீட்டாளர்களின் நஷ்டத்தை ஈடுகட்டவே போதுமானதாக இருந்தது. பொது சொத்துகளை விற்றும் ஐந்து பில்லியன் யூரோதான் திரட்ட முடிந்தது. இந் நிலையில் கிரீஸ் நாட்டு பொருளாதாரத்தைச் சரிவிலிருந்து மீட்க ஐரோப்பிய யூனியனும், உலக வங்கி மற்றும் ஐ.எம்.எ்.ப். ஆகியவை கடன் அளிக்க பல்வேறு நிபந்தனைகளைக் கட்டாயமாகச் செயற்படுத்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றன.

அதிக வரிவிதிப்பு, பென்ஷன் குறைப்பு, பொதுத்துறை வேலை வாய்ப்பு குறைப்பு ஆகிய நடவடிக்கைகள் கிரீஸ் மக்களை மோசமாகப் பாதித்துள்ளன. விரக்தியிலும் வெறுப்பிலும் உள்ள மக்கள் சிக்கன நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் மீது மிகுந்த கோபத்தில் உள்ள சூழலில் அங்கு மே6இல் தேர்தல்நடந்தது.

300 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில், எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடைக்கவில்லை. பசோக் மற்றும் கன்சர்வேட்டிவ் டெமோக்ரடிக் கட்சி இரண்டும் சேர்ந்து 149 இடங்களையே பெற முடிந்தது. கூட்டணி அரசுக்கான முயற்சிகளும் பலனளிக்கவில்லை. இந்நிலையில், ஜூன் 17 அன்று மறுதேர்தல் நடத்தப்படவிருக்கிறது.

ஐரோப்பிய யூனியனின் நிதி ஒழுங்கு உடன்படிக்கைக்கு புதிய அரசு இசைவு தந்தாக வேண்டும். அப்போதுதான் கிரீஸுக்கு கடன் அளிக்கப்படும். யார் வெற்றி பெற் றாலும் நடக்கப்போவது இதுதான். யூரோ ஆதரவு அரசு அமையாவிட்டாலோ அல்லது ஐரோப்பிய யூனியன்/ஐ.எம்.எ்.ப். ஆகியவற்றையும் சிக்கன நடவடிக்கை களையும் எதிர்க்கும் ஆட்சி வந்து விட்டாலோ வெளிநாட்டு உதவிகள் உடனே நிறுத்தப்படப் போவதுஉறுதி. ஐரோப்பிய மத்திய வங்கி யூரோ கரன்சியை அளிப்பதைநிறுத்திவிடும். அவ்வாறு நடந்தால்,வேறு வழியின்றி ஐரோப்பிய யூனியனிலிருந்தும், யூரோவிலிருந்தும் கிரீஸ் வெளியேறிவிடும் என்கிறார்கள்.

### 3. ரஷ்யா: இன்றும் புடின், நாளையும் புடின்

இலஞ்சம் ஊழல் ஒழிப்பு, அதிகாரதுஷ்பிரயோக எதிர்ப்பு ஆகிய கோஷங்களை முன்வைத்தே ரஷ்ய எதிர்க்கட்சிகள் ஜனாதிபதிதேர்தலைச் சந்தித்தன. ஆளும் புடின் கட்சி (யுனைட்டெட் ரஷ்யா) முன்வைத்தது ஒன்றைத்தான். நிலையான ஆட்சி! ஆனால், சிக்கலே அங்கிருந்துதான் தொடங்குகிறது.



2000-2008 காலகட்டத்தில் ஜனாதிபதியாக இருந்தவர் விளாடிமிர்புடின். அரசியலமைப்புச் சட்டப்படி தொடர்ச்சியாக இரண்டு முறைதான் ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என்ற நிலையில் திமித்ரி மெத்வடேவுக்கு வழிவிட்டார். இது ஒரு ஏற்பாடு.மெத்வடேவ் ஜனாதிபதியாக இருக்கும் போது, புடின் பிரதமர். புடின்ஜனாதிபதியானால், மெத்வடேவ் பிரதமர்.

இது அநியாயம் என்று கடந்த டிசம்பரிலிருந்தே எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகப் போராட ஆரம்பித்து விட்டன. மொஸ்கோ, சென் பீட்டர்ஸ்பர்க் ஆகிய நகரங்களில் ஆயிரக்கணக்கானவர் திரண்டனர். அரசு கீழிறங்கி வந்து சில சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. புதிய அரசியல் கட்சிகள் பதிவு செய்து கொள்வதில் இருந்த தடை அகற்றப்பட்டது. ஆனால், கட்சிகள் கூட்டணி வைத்துக் கொள்ள முடியாது. பொதுத் தொலைக்காட்சி வேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்கப்பட்டது.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் மூன்றாவது முறையாகபுடினே 63 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். கடந்த முறையைப் போல 4 ஆண்டுகள் அல்ல, 6 ஆண்டுகள் இந்த முறை அவர் ஆட்சி செய்யலாம். அதற்கான திருத்தத்தை மெத்வடேவ் பதவியில் இருந்தபோதே புடின் செய்துவிட்டார். தேர்தலில் பெரி யளவுக்கு முறைகேடுகள் நடந்திருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. போராட்டங்களும் நடைபெற்றன. புடின் கவுலைப்படுவதாக இல்லை.

---

**:.பிராங்கைஸ் ஹோலண்**



டசோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 57 வயதான ஹோலண்டேயின் முதல் அடையாளமே அடக்கமானவர், எளிமையானவர் என்பதுதான். ஸ்கூட்டரில் அலுவலகத்துக்குச் சென்றுகொண்டிருந்தவர், கடந்த ஓராண்டாகத்தான் நீண்ட தேர்தல் பிரசாரப் பயணம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக காரைப் பயன்படுத்த ஆரம்பித்தார்.

பலவீனம் : பொதுவாக கறைபடியாத இமேஜுக்கு சொந்தக்காரர் என்று கருதப்பட்டு வந்தாலும், பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான சர்வதேச நிதியத்தின் முன்னாள் தலைவரான ஸ்டராஸ்கானுடன் விருந்துண்டது கடும் கண்டனங்களை ஏற்படுத்தியது.

வாக்குறுதிகள் : நீர், எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றுக்கு மானியம் அளிக்கப்படும். கல்வித்துறையில் புதிதாக 60,000 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். அதிக வருமானமுள்ள பெரும்பணக்காரர்களுக்கும் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அதிக வரி. வளர்ச்சிப் பொருளாதாரத்துக்கு ஆதரவு. ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் சம்பளத்தை 30 வீதம் குறைத்தல். ஓய்வு பெறும் வயதை 60ஆகக் குறைத்தல். ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்துக்கு ஆதரவு. ஓரினக் காதல் ஜோடிகள் தத்தெடுத்துக்கொள்ள சட்டரீதியான அங்கீகாரம். முதல் மூன்று மாதங்களுக்கு எரிபொருள் விலைகளை மாற்றாமல் இருத்தல். பணவீக்கம் மற்றும் வளர்ச்சியின் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியத்தை மாற்றியமைத்தல்.

---

**நிகோலஸ் சர்கோசி**

57' வயதான சர்கோசி ஏற்கெனவே .இரு முறை திருமணமாகி விவாகரத்து பெற்றவர். 2008இல் பிரபல மொடலும் கவிஞருமான கார்லா புரூனியைத் திருமணம் செய்தார். 2007 முதல் 2012 வரை ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நல்ல பெயரையும் கெட்ட பெயரையும் ஒருங்கே சம்பாதித்தவர்.

பலம் : ஆதரவாளர்களின் கருத்துப் படி, தனது பதவிக் காலத்தில் பொருளாதார நெருக்கடியை திறமையாகச் சமாளித்தவர். பாதுகாப்பு மற்றும் உலக விவகாரங்களில் அமெரிக்கா மற்றும் பிரிட்டனுடன் மிகச்சுமுகமான உறவைப் பேணியவர்.

பலவீனங்கள் :முதல் முறையாக தேர்தலில் வெற்றி பெற்ற போது, வாழ்த்த வந்த கட்சிக் காரர்களையும் ஆதரவாளர்களையும் பல மணி நேரம் காக்க வைத்தார். அதிகப் படியாக பந்தா செய்பவர். ஆர்ப்பாட்டமானவர். பிரெஞ்ச் அதிபர்களுக்கே உரிய மிடுக்கு இல்லாத வர். 2007 தேர்தலின்போது சட்ட விரோதமாக லிபிய அரசிடமிருந்து 66 மில்லியன் டொலர் பணம் பெற்றதாக குற்றச்சாட்டு உண்டு.



# நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் மலேரியாக் காய்ச்சலினால் பீடிப்பு

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடான பெனின் இராஜ்ஜியத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களில் 17 பேர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்கா விமானநிலையத்தின் சுகாதார பரிசோதனைப் பிரிவு மேற்கொண்ட பரிசோதனைகளின்போது இந்த விடயம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மலேரியாக் காய்ச்சலால் பட்டிக்கப்பட்டவர்களில் ஆறு வயதிற்குட்பட்ட ஐந்து பிள்ளைகளும் அடங்குவதாக சுகாதார பரிசோதகர் டி.எம்.பி.சமரக்கொடி



தெரிவித்துள்ளார்.

மெனின் இராஜ்ஜியத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில், விமான நிலையத்தை வந்தடைந்த இலங்கையர்கள் அனைவரும் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்த சிறுவர்களை சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையிலும் ஏனையவர்களை ஐ.டி.எச்.வைத்தியசாலையிலும் அனுமதிக்க நடவடிக்கை எடுத்ததாக விமான நிலைய சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு செல்லும் நோக்கில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெனினுக்கு சென்றிருந்த 147 இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்களில் 20 பெண்களும் அடங்குகின்றனர்.

# பொன்சேகாவை விடுவித்த கட்டளை பிரதியை நீதிமன்றில் சமர்ப்பிக்கக் கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா சிறையிலிருந்து விடுதலையாக வழி வகுத்த ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரதியை மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியது.

ஜனாதிபதியின் மேற்படி கட்டளையின் பிரதியை கோரி நீதியமைச்சின் செயலாளர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்புமாறு நீதிபதிகள் டபிள்யூ எல். ரஞ்சித் சில்வா, ஏ.டபிள்யூ. சலாம், உபாலி அபேரட்ன ஆகியோரைக் கொண்ட குழாம் நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டது.

தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட அனுமதிக்குமாறு கோரி சரத் பொன்சேகா தாக்கல் செய்த வழக்கில் பொன்சேகா சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ரொமேஷ் டி சில்வா விடுத்த கோரிக்கையைடுத்தே நீதிமன்றம் மேற்படி கட்டளையை பிறப்பித்தது. இவ்வழக்கின் அடுத்த விசாரணை ஜூலை 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# 2006 இல் கொலை முயற்சி; மூவர் மீது வழக்குப் பதிவு

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி கொள்ளுபிட்டியில் முன்னாள் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பசிர் அலி மொஹமட்டை கொலை செய்ய முயற்சித்தமை, 4 சிப்பாய்கள் 4 பொது மக்களை உயிரிழக்கச் செய்தமை தொடர்பில் புலிச் சந்தேக நபர்கள் மூவர் மீது சட்ட மா அதிபர் நேற்று முன்தினம் வழக்குப் பதிவு செய்துள்ளார்.

குறித்த வழக்கை எதிர்வரும் நவம்பர் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் தற்போது சிறையில் உள்ள நிலையில் அவர்கள் மீதான குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் சந்தேக நபர்களிடம் கை விரல் அடையாளம் பெற்றுக் கொள்ளுமாறு மேல் நீதிமன்ற காலவாளிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

3 பகுதி வழக்கும் 28 சாட்சியாளர்கள் கொண்ட அறிக்கையும் சட்ட மா அதிபரால் நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# "சார்க்" நாடுகளுடன் வர்த்தகம் மீளாய்வு செய்கிறது அரசு

(கொழும்பு)

'சார்க' நாடுகளுடனான வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது. சார்க் நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் பொருட் கொடுககல் வாங்கல்கள் தொடர்பான உடன்படிக்கைகளினால் உள்ளூர் உற்பத்திகளுக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைகளை மீளாய்வு செய்யவோ அல்லது இரத்துச் செயயவோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதற்கான தீர்மானம் கடந்த புதன்கிழமை அமைச்சரவையில் நிறைவேற்றப் பட்டது என தெரிவித்த அமைச்சர், தெற்காசிய சுதந்திர வர்த்தக வலய உடன்படிக்கையில் திருத்தத்தை மேற் கொண்டு இந்தியாவின் இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி யில் எவ்வித உண்மையுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அமைசசர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் கெஹெலிய, மேற்படி உடன்படிக்கைகள் தொடரபான மீள்பார்வை அல்லது இரத்து தொடர்பான தீர்மானமானது இந்தியாவுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல.

இலங்கையுடன் வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள சார்க் நாடுகள் அனைத்துககும் பொதுவான தீர்மானமே அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி, பொருட்களின் கொடுக்கல் வாங்கல்களின்போது உள்ளூர் உற்பத்தி மீதான ஏதேனும அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பில் அரசாஙகம் கவனம் செலுத்தி நடவடிககை எடுக்கும் என்று அமைச்சர் கூறினார்.

# பெண் கைதிகளுக்கு தொழிற்பயிற்சி

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சிறைச்சாலைகளைச் சேர்ந்த பெண் கைதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் விசேட திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

அந்தந்த பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் கைதிகளுக்கான தொழில் பயிற்சிகளை வழங்குமாறு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதற்கமைய தையல், அழகியற்கலை, பனைசார் கைவினைப் பொருட்கள் உற்பத்தி, பேக்கரி உற்பத்தி உள்ளிட்ட பயிற்சிகள் கைதிகளுக்கு வழங்கப்படுவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸகுமார் தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் சுமார் நானகாயிரம் பெண் கைதிகள் இருப்பதாகவும் ஏற்கனவே பல சிறைச்சாலைகளில் கைதிகளுக்கான பயிற்சித் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுககப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்திற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியேற்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்துக்கான புதய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள பூஜித ஜெயசுந்தர நேற்றுமுன்தினம் காலை தனது கடமைகளை மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பொறுப்பேற்றக் கொண்டார்.

புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தனது கடமைகளை பொறுப்பேற்கும் வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சென விரட்ன மற்றும் மாவட்ட பொலிஸ அத்தியட்சகர், உதவி பொலிஸ அத்தியட்சகர் லால் செனவிரட்ன உட்பட உதவிப் பொலிஸ அத்தியட்சகர்கள், பொலிஸ நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மதப்பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கடமைகளைப் பொறுப்பேற்கும் முன்னர் பொலிஸ அணி வகுப்பு மரியாதை இடம்பெற்றது. இதையடுத்து சமயப்பிரமுகர்களின் ஆசியைப் பெற்றுக் கொண்ட பின்னர், புதிய சிரேஷ்ட



பிரதிப்பொலிஸ மா அதிபர் தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

வடமேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய பூஜித ஜெயசுந்தர கிழக்கு மாகாணத்துக்கான பிரதிப்பொலிஸ் மா அதிபராக கடந்தவாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கொழும்பு பல்கலைக்கழகத்தில் பாலியல் வல்லுறவு இடம்பெறவில்லை

## உபவேந்தர் திட்டவட்டமாக மறுப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட மாணவியொருவர் பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டதாக கூறப்படுவதை கொழும்பு பல்கலைக்கழக உப வேந்தர் ஷானிகா ஹிரும்புரேகம திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

அவ்வாறான சம்பவம் இடம்பெற்றமைக்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவியொருவர், சிரேஷ்ட மாணவர்கள் குழுவொன்றினால் பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதாக தெரிவிக்கும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு மார்ச் 16 ஆம் திகதி கடிதமொன்று கிடைத்தது.

பல்கலைக்கழகங்களில் அதிகரித்துள்ள பகிடிவதை மற்றும் வன்முறைகளுக்கு இச்சம்பவம் ஓர் உதாரணம் என கடந்தவாரம் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியிருந்தார். எனினும் அவ்வாறான சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என உபவேந்தர் ஹிரும்புரேகம தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவம் நடந்ததாக என்னால் நம்பவோ ஏற்றுகொள்ளவோ முடியவில்லை. இது உண்மையல்ல என்பதில் உறுதியாகவுள்ளேன். ஆனால் இப்படியான சம்பவம் இடம்பெற்றிருந்தால் நாம் கடும் நடவடிக்கை மேற்கொள்வோம் என்றார்.


இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கொழும்பு பலகலைக்கழகம் கோரியுள்ளதாகவும் இதுவரை பதிலெதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.



மேற்படி கடிதம் உயர்கல்வி அமைச்சருக்கு 16.03.2012 திகதி திகதி கிடைத்ததாகவும் ஆனால் அதில் 19.04.2012 என திகதியிடப்பட்டுள்ளதாகவும் கலைபபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் இருண்ட பெரய மண்டபமொன்றில் நடந்ததாக இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறான இடம எதுவும் பல்கலைக்கழகத்தில் இல்லை. விரிவுரை அறைகள் மாத்திரமே பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளன. அவற்றுக்குள் மற்றவர்கள் அறியாத வகையில் செலல முடியாது என கலைப பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஜயந்த ரோஹண கூறினார்.

# 10 திரையரங்குகளில் டிஜிட்டல் முறைமை



(கொழும்பு)

இலங்கையிலுள்ள திரையரங்குகளில் டிஜிட்டல் - முறைமையை அனுமதிக்கும் வகையில் அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம் திருத்தப்படும் என அக்கூட்டுத்தாபனம் தெரிவித்துளளது.

நாடு முழுவதும் இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் பரீட்சார்த்தமாக 10 திரையரங்குகளில் டிஜிட்டல் முறைமையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும் என இலங்கை திரைபபடக் கூடடுத்தாபனத் தலைவர் அசோக சேரசிங்க கூறினார்.

தற்போது பயன்படுத்தப்படும் முறைகள் காலம்கடந்தவை. அதுமட்டுமன்றி மிக அதிகளவான மின்சாரத்தையும் இந்த முறைமைகளில் பயன்படுத்த வேண்டும். அத்துடன் படச்சுருள்களை கொண்டுவருவதற்காக பெருமளவு கப்பல் செலவும் ஏற்படுகின்றது.

டிஜிட்டல் முறையில் படத்தை காண்பிப்பதற்கு ஒருவர் மாத்திரம் இருந்தால் போதுமானதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் முறையே இப்போது உலகெங்கும் உள்ளதால் இன்னும் சிறிது காலத்தில் அனலொக் முறை வழக்கொழிந்துவிடும். இலங்கை நீண்டகாலத்துக்கு முன்னரே இந்த முறைமைக்கு மாறியிருக்க வேண்டும் என அவர் கூறினார்.

# 22 வருடங்களாக முடங்கியிருந்த
# 768, 769 பேருந்து சேவைகள் தேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கணிசமான அளவு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், போக்குவரத்துத் தேவைகள் இதுவரை பூர்த்தியாக்கப்படாமையால், தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள நகுலேஸ்வரம் மற்றும் அச்சுற்றாடலில் உள்ள கொல்லங்கலட்டி, இளவாலை போன்ற பகுதிகளிலுமே மக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் நிலையில் இப்பிரதேசங்களினூடாக அரச பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22 வருடங்களுக்கு முன்னர் சேவையிலீடுபட்ட அரச பேருந்து சேவையான 768 இலக்க மார்க்க சேவையினை கீரிமலையிலிருந்து தச்சன் காட்டுச்சந்தி, கொல்லங்கலட்டி, அம்பனை, அளவெட்டி, மாகியப்பிட்டி, கந்தரோடை, சுன்னாகம் ஊடாக யாழ்ப்பாணம் வரையும் 769 இலக்கமார்க்க சேவையினை கீரிமலை, மாவட்டபுரம், காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் வரையும் இடம் பெற்று வந்தது.

இச் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டால் மீள்குடியேறியுள்ள, தாம் சிரமங்களின்றி போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையைக் கருத்தில கொண்டு இந்த மார்க்க சேவையை ஆரம்பிக்குமாறு வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீ மோகனன் இலங்கை போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

## பூநகரி பிரதேச சபைக் கூட்டம் இடை நடுவில் ஒத்திவைப்பு

(முழங்காவில்)

பூநகரி பிரதேச சபையின் 11 ஆவது மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை சபை மண்டபத்தில் நடைபெற்றபோது, எதிரணி உறுப்பினர்களின் சூடான வாக்குவாதத்தால் இடைநடுவில் கூட்டத்தை பிரதேசசபைத் தவிசாளர் ஒத்திவைத்தார்.

இது சம்பந்தமாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கையில், தற்காலிகமாக நியமனம் வழங்கப்பட்ட சாரதி ஒருவரின் நடவடிக்கை சம்பந்தமாக தலைவருக்குக் கிடைத்த முறைப்பாட்டை தொடர்ந்து, அவர் மேற்கொண்ட நடவடிக்கை சம்பந்தமாக தலைவருக்கும், எதிரணி உறுப்பினர் ஒருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் தலைவர் கூட்டத்தை ஒத்தி வைத்து வெளியேறியதாக தெரிவித்தார். (112)



## பரமர் சங்கமம்

"நாய்க்கு நடுக்கடல் ஆனாலும் நக்குத்தண்ணி" என்பது போல எம்மவர் எந்தப் பெரிய பதவியில் இருந்தாலும் சில அடிப்படைக் குணங்கள் அவர்களை விட்டுப் போகாது.

யாழ். போதனா வைத்தியசாலையில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமானதும் அங்கே வேலை செய்கின்ற சிற்றூழியர் தொடக்கம் மேலதிகாரிகள் வரைக்கும் நாளாந்தம் ஏதாவதொண்டை அங்கிருந்து எடுத்துக் கொண்டு போகாத வரில்லை எனலாம்.

இது புதிதாக அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நாலு, ஐந்து மாடிக்கட்டடங்கள் நிர்மாணிக்கத் தொடங்கிய பின்னால் என்றில்லாமல், அதற்கு முன்பாகவும் பல வருடங்களாகத் தொடர்கின்ற காரியங்கள்தான்.

நோயாளர்களுக்கு வழங்கவென சுகாதார அமைச்சால் அல்லது பிறநாடுகளின் நன்கொடையாக வழங்கி யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பெருந்தொகையாக அனுப்பி வைக்கப்படுகின்ற மருந்துகளைக் களவாடி வெளிக்கடைகளுக்கு விற்றுப் பணம் பார்த்த அதிகாரிகளின் செயற்பாடுகளெல்லாம் முன்னமே அவ்வப்போது செய்தித்தாள்களில் வெளி வந்ததைப் பார்த்துள்ளோம்.

அதை விடவும், சில்லறையாகவும் சிற்றூழியர் தினமும் தங்களின் "தண் ணி"த் தேவையைப் பூர்த்தி செய்ய மருந்து, பண்டேஜ், கிருமிநாசினிப் பொருட்களை எடுத்துச் சென்று என்று சொல்வதை விடக் களவாடிச் சென்று வித்து வருவதும் புதுமையான ஒன்றில்லை.

அரச நிர்வாகத்துக்கு நேர்மையாக உழைப்பதாக நடித்துக் கொண்டு, நாட்டு மக்களின் சொத்துகளை கபளீகரம் செய்யும் உலுத்தர்களை அரச பணியாளர்கள் என்று எவ்விதம் அழைப்பது?

யாழ். போதனா வைத்திசாலையில் புதிதாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நான்கு மாடிக்கட்டடம் நிர்மாண வேலைகள் தொடங்கிய காலத்திலேயே ஒரு தொகை இரும்புக் கம்பிகள் களவாடப்பட்டதான சம்பவம் நடைபெற்று கையும் மெய்யுமாகப் பிடிபட்ட செய்தி பரவலாக வெளிவந்தது.

சமீபத்தில் மிகத் துணிகரமான முறையில் மின்பிறப்பாக்கி ஒன்றும் நூற்றுக்கு மேற்பட்ட இரும்புக் கேடர்களும் லொறி ஒன்று கொண்டு செல்லப்பட்டு வெளியெ எடுத்துச் செல்லப்பட்ட சங்கதி வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்தக் களவு முயற்சியில் பெரிய அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் பரமருடைய காதுகளுக்கு எட்டியது இல்லையேல் வாசல்காவலாளி, இடைப்பரிசோதனைகள் எதுவும் இல்லாமல் எப்படி எடுத்துச் செல்ல முடிந்தது?

எத்தனையோ கண்கள் பார்த்திருக்க நடைபெற்றதனால் எப்படியோ பொருட்கள் மீளக்கொண்டு வரப்பட்டது. ஓடமும் ஒருநாள் வண்டியிலேறும் வண்டியும் ஒருநாள் ஓடத்திலேறும் எண்டு சும்மாவே சொல்லி வைச்சவை. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் தானே... பின்ன இல்லையே...

## வாய்க்கால் புனரமைப்பு

(ஆனைக்கோட்டை)

யு.என்.டி.பி. நிறுவனத்தினால் முன்னேற்றத்திற்கான சமூகம் C4,P2 திட்டத்தின் கீழ் உள்ள முள்ளி ஆனைக் கோட்டை கிராமத்திலுள்ள கலையொளி சன சமூக நிலையத்தினரும், மகளிர கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து வேலைத்திட்ட மொன்றை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி சங்கத்தினருடன் பிரதேச பொதுமக்களும் இணைந்து 150 மீற்றர் நீளமான வாய்க்கால் கட்டுமாணப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (104)


## கடைத்தொகுதி கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தசாமி கோவில் பகுதியில் உள்ள கடைத் தொகுதி எதிர்வரும் 24 ஆம் திகதி உரியவர்களிடம் ஒப் படைக்கப்படவுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் 571 ஆவது படைப்பிரிவின் கொமாண்ட்ர் பிரிகேடியர் ரோகல மற்றும் கடை உரிமையாளர்கள், கிராம சேவையாளர் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன் போது பாதுகாப்புக் காரணங்களுக்காக பொது மக்களின் காணிகளில் இருக்கும் நாம், கட்டம் கட்டமாக அவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்கவுள்ளோம் என பிரிகேடியர் ரோகல தெரிவித்தார். (77)



அரியாலை தென்கிழக்கு மணிப்பூரி வீதி இணைப்பு வேலைகளில் மக்களின் பங்களிப்பு தொடர்பாக ஆசிய பௌண்டேசன் நிறுவனத்தின் பிரதி நாட்டுப் பிரதிநிதி கீரதா சுபகர்வல், தொழில் நுட்ப ஆலோசகர் சுபாகரன், உள்ளூராட்சி உதவித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சந்திரா தேவி சுபாஸ்சந்திரன் மற்றும் நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.இராவீந்திரதாஸன் ஆகியோர் கலந்துரையாடுவதைக் காணலாம்.

## தெல்லிப்பளையில் 3 கட்டடங்கள் துரித கதியில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தெல்லிப்பளைச் சந்தியில் அமைக்கப் பட்டு வரும் 3 கட்டடங்கள் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பளைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 2 மாடிகளைக் கொண்ட நவீன சந்தைக் கட்டடம், நூல்நிலையக் கட்டடம், பேருந்து தரிப்புக் கட்டடம் ஆகிய கட்டடங்களே துரித கதியில் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன.

இதில் பேருந்து தரிப்பு நிலையம் யாவும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன. ஏனைய 2 கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இம் மூன்று கட்டடங்களுக்குமான அடிக்கல் கடந்த வருடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நாட்டி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வி)

## கூட்டம்

(பருத்தித்துறை)

வட இந்து ஆரம்ப பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டம இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பதில் அதிபர் திருமதி ந.செந்தில்வேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (109)

## முரசின் இன்றைய பலன்

(16.06.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 02 ஆம் திகதி. துவாதசி பிற்பகல் 3.34 வரை.
நட்சத்திரம் பரணி மாலை 5.52 வரை. சித்தாமிர்தம். பிரதோஷ விரதம்.
இராகுகாலம் 08.53 - 10.23 வரை. சுபநேரம் 2.53 - 4.23 வரை.
எமகண்டம் 1.23 - 2.53 வரை. குளிகைகாலம் 5.53 - 7.23 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | திடீர் பிரயாணம், குடும்பத்தில் ஒத்துழைப்பு, தொழிலில் தடை ஏற்படலாம், பண வரவு. |
| ரிஷபம் | ஆடம்பரத்தில் நாட்டம், குடும்பத்தில் கசப்பு, வீண் செலவுகள், பெற்றோர் ஆலோசனை. |
| மிதுனம் | சொத்துப் பலிதம், தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு, ஒத்துழைப்புக் கிடைக்கும், பணியில் நிம்மதி. |
| கடகம் | அரசாங்க நன்மை, புத்திரரால் கவலை, பயணங்களைத் தவிர், எதையும் சமாளிப்பீர். |
| சிம்மம் | கழுத மூல நன்மை, உத்தியோகத்தில் நெருக்கடி, தொட்டதெல்லாம் பொன்னாகும், பண வரவு. |
| கன்னி | முன்தினம் போல் கவனம் அவசியம், பயணங்களைத் தவிர்க்கவும், ஆடம்பரச் செலவுகள். |
| துலாம் | சுகவிருத்தி, கூட்டுத் தொழிலில் அனுகூலம், உணவு விடயத்தில் கவனம், பதவி உயர்வு. |
| விருச்சிகம் | காரிய சித்தி, சுபகாரியத்தடை ஏற்படும், குடும பத்தில் நற்பெயர், கல்வியில் முன்னேற்றம். |
| தனுசு | பரிதவிப்பு, புத்திரரால் மகிழ்ச்சி, குடும்பத்தில் நற்பெயர், கல்வியில் முன்னேற்றம். |
| மகரம் | நற்கீர்த்தி, மகிழ்விக்கும் செய்திகள் வரும், திட்டங்களில் வெற்றி கிட்டும், குடும்பத்தில் திருப்தி. |
| கும்பம் | பிற்பகல் நன்று, தான தர்மத்தில் ஈடுபாடு, விரும்பிய இடமாற்றம், விருந்துபசாரங்கள். |
| மீனம் | பணவரவு, குடும்பத்தில் சச்சரவுகள், மனைவியுடன் கருத்து வேறுபாடு, எதிர்பாராத பொறுப்பு. |

# அரியாலை முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணியளவில் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் ஆ. நா. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டு நிகழ்வின் பிரதம விருந்தினராக உதவிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பூ. குகதாசன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவரின் பெற்றார் திருமதி பரமேஸ்வரன் இந்துமதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறார்கள் 'ஏ', 'பி', 'சி' என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஓட்டம், சொல்லாக்கம், ஒத்த வடிவத்தை எடுத்து ஓடுதல், நிறம் தீட்டல், ஒத்த பொருளை இனங்காணல், கொடி நடுதல், நிறந் தெரிதல் போன்ற போட்டிகள் இடம்பெறவுள்ள அதேவேளை, நீர் நிரப்புதல், பழங்களை இனங்காணல், எண்களை இனங்காணல், சிரட்டையில் நடத்தல், குழு விளையாட்டு, சங்கீதக் கதிரை மற்றும் பெற்றோர், பழைய மாணவர்களின் நிகழ்ச்சி என்பனவும் இடம்பெறவுள்ளதாக போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர். இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், பெற்றோர், உறவினர்களை மற்றும் அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். இம்முன்பள்ளி நோர்வே வாழ் அரியாலை வாசிகளின் அனுசரணையுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தங்கம் வென்றவருக்கு பாலியல் புகார்



(கொல்கத்தா)

ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற தடகள வீராங்கனை பாலியல் புகாரில் கைது செய்யப்பட்டுள்ளார். ஆணாக இருந்த இவர் பெண்ணாக மாறியதாக பரபரப்பு எழுந்துள்ளது. கத்தார் தலைநகர் தோஹாவில் கடந்த 2006ஆம் ஆண்டு ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில், பெண்களுக்கான 4×400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இந்தியாவின் பிங்கி பரமனிக் தங்கம் வென்றார். அதே ஆண்டு மெல்போர்னில் நடந்த காமன்வெல்த் போட்டியில் வெள்ளி வென்றார். இதையடுத்து, பரமனிக் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் தற்போது பரமனிக் மீது பரபரப்பு குற்றச்சாட்டு எழுந்துள்ளது. வடக்கு 24 பராகனசின் பகாய்ஹதி பொலிஸ் நிலையத்தில் பெண் ஒருவர் நேற்று புகார் கொடுத்தார். அதில், பரமனிக் ஆண் என்றும், அவர் தன்னை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை காட்டி கணவன், மனைவியாக வாழ்ந்தார் என்றும், பின்னர் பெண்ணாக மாறி தன்னை ஏமாற்றி விட்டதாகவும் கூறியுள்ளார்.

புகாரின் அடிப்படையில் பரமனிக் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை பொலிஸார் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தினர். அதில், பரமனிக் ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ அறிக்கை கிடைத்த பிறகு பரமனிக் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்த வீராங்கனை ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர் என்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காலிறுதியில் சாய்னா

(ஜகார்த்தா)

இந்தோனேஷியா ஓபன் பட்மின்ரன் தொடரின் காலிறுதியில் விளையாட சாய்னா நேவால் தகுதி பெற்றுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் இந்தோனேஷியா ஓப்பன் பட்மின்ரன் தொடர் இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் நடக்கிறது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்று போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. உலகின் 5ஆம் நிலை வீராங்கனையான இந்தியாவின் சாய்னா நேவால், இந்தோனேஷியாவின் அப்ரில்லா யுஸ்வன்தாரியை எதிர்த்து விளையாடினார். 46ஆம் நிலை வீராங்கனையான யுஸ்வன்தாரியை, சாய்னா 21,17, 14,21, 21,13 என்ற செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

# மாவட்ட மட்ட தாச்சி இன்று பலப்பரீட்சை



காளி அம்பாள்



ஆலடி சிந்து

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாவட்ட மட்ட தாச்சிப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்றைய தினம் கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் உடுவில் ஆலடி சிந்து அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# அனைத்திலும் முதல் நிலை


(சிட்னி)

ஒரு நாள் போட்டியில் நாங்கள் இப்போது முதல் நிலை இடத்தில் இருக்கிறோம். ஆனால் இதே நிலையை தொடர வேண்டும். டெஸ்ட், ஒரு நாள் போட்டி மற்றும் ருவென்ரி - 20 என மூன்றிலும் இரண்டு ஆண்டுக்குள் முதல் அணியாக நாங்கள் இருக்க விரும்புகிறோம். அதற்கு இப்போதில் இருந்தே கடினமாக உழைக்க வேண்டும் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

வீரர்கள் யாருமே தேவைக்கு அதிகமான கோரிக்கைகளை வைக்கவில்லை. விரைவில் இந்த பிரச்சினை சரியாகும் என்று நம்புகிறேன். இப்போதுள்ள ஊதியம் அளிக்கும் முறையே நன்றாக உள்ளது. ஏற்கனவே எங்களது ஒப்பந்தம் திறமை அடிப்படையில் தான் உள்ளது. 25 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளோம்.

இதில் 90 சதவீத வீரர்கள் ஓராண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்படுகிறார்கள். ஓராண்டுக்குள் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தாவிட்டால் ஒப்பந்தத்தில் தொடர முடியாது. அதன் பிறகு அடுத்த வேலையை பார்க்க வேண்டியது தான் எனத் தெரிவித்தார்.

# கிறிஸ் கெய்ல் நம்பிக்கை



(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சாதிப்பேன் என, மேற்கிந்தியத்தீவு அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் போர்டுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக, சமீபகாலமாக சர்வதேச போட்டியில் இருந்து புறக்கணிக்கப்பட்டார். தற்போது சமரசம் ஏற்பட, இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டார்.

இதுகுறித்து கெய்ல் கூறியது: மேற்கிந்தியத்தீவு அணியில் மீண்டும் இடம் பிடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அணிக்காக நிறைய போட்டிகளில் விளையாடி, வெற்றிக்கு முக்கிய பங்குவகிக்க விரும்புகிறேன். ஒருநாள் போட்டியை தொடர்ந்து விரைவில் டெஸ்ட் போட்டியிலும் விளையாடுவேன். எனது அணிக்காக நிறைய சதம் அடிக்க விரும்புகிறேன்.

ஒருநாள் போட்டியில் மீண்டும் 45 எண் இடம் பெற்ற ஜெர்சி கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். மிடில்சக்ஸ் அணிக்கு எதிரான பயிற்சி போட்டியில் விரைவில் ஆட்டமிழந்தமை ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும் ஒருநாள் போட்டியில் முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்தார்.



# ஸ்பெயின் இலகு வெற்றி

யூரோக் கிண்ணக் கால்பந்தாட்ட போட்டிகளில் ஸ்பெய்ன் அணிக்கும், அயர்லாந்து அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் ஸ்பெய்ன் அணி மிக இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

போலந்தின் பி.ஜி.ஈ. எரினா டன்ஸ்க் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டி குழு சீ இற்கான போட்டியாக அமைந்தது. இப்போட்டியில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து அயர்லாந்து அணி யூரோக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

ஐரோப்பிய மற்றும் உலகச் சம்பியன்களான ஸ்பெய்ன் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியதுடன், அயர்லாந்து அணிக்கான வாய்ப்புக்களையும் வழங்காது விளையாடியது.

போட்டி ஆரம்பித்து 4ஆவது நிமிடத்தில் ஸ்பெய்ன் அணி சார்பாக முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்த பெர்னான்டோ டொரஸ், ஸ்பெய்ன் அணிக்கு ஆரம்பகட்ட ஆதிக்கத்தை வழங்கினார்.

அதன் பின்னரும் அவ்வணி தொடர்ந்தும் கோல்களைப் பெற்றுக் கொள்ள முயற்சித்த போதிலும் முதற்பாதியில் மேலதிக கோல்களைப் பெற்றுக்கொள்ள முடியாது போகவே முதற்பாதி 1-0 என்ற கணக்கில் முடிவடைந்தது. இரண்டாவது பாதி ஆரம்பித்ததும் போட்டியின் 49ஆவது நிமிடத்தில் டேவிட் சில்வா ஸ்பெய்ன் அணி சார்பான இரண்டாவது கோலைப் பெற்றுக்கொள்ள அயர்லாந்து அணியின் மீதான அழுத்தம் அதிகரித்தது. எனினும் அந்த அழுத்தத்தைக் கூட்டும் வகையாக போட்டியின் 70ஆவது நிமிடத்தில் பெர்ணான்டோ டோரஸ் போட்டியில் தனது இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய ஸ்பெய்ன் அணி சார்பாக மாற்று வீரரான பப்ரிகஸ் ஸ்பெய்னின் 4ஆவது கோலை போட்டியின் 83ஆவது நிமிடத்தில் பெற்றுக்கொடுத்த அயர்லாந்து அணி யூரோக் கிண்ணத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

# சர்ச்சையில் நிக்லாஸ்

(லிவிவ்)

டென்மார்க் கால்பந்து வீரர் நிக்லாஸ் பென்டிட்னெர் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.


யூரோ கோப்பை கால்பந்தில் நேற்று முன் தினம் 'பி' பிரிவில் நடந்த ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி 3-2 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை சாய்த்தது. இந்த ஆட்டத்தில் டென்மார்க் அணிக்காக இரண்டு கோல்களையும் அடித்த நிக்லாஸ் பென்டிட்னெர் சர்ச்சையில் சிக்கியுள்ளார். 2ஆவது கோல் அடித்த மகிழ்ச்சியில் அவர் தனது பனியனை தூக்கி காண்பித்தபடி ஓடினார். அப்போது அவர் அணிந்திருந்த உள்ளாடை தெரிந்தது. அதில் அயர்லாந்தை சேர்ந்த ஒரு சூதாட்ட கம்பெனியின் லோகோ பொறிக்கப்பட்டிருந்தது. அதிகாரப்பூர்வ ஸ்பான்சர் தவிர மற்ற நிறுவனங்களின் பெயர், லோகோ உள்ளிட்டவற்றை களத்தில் எந்த வகையிலும் பயன்படுத்தக்கூடாது என்று ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. அதனை பென்டிட்னெர் மீறியிருப்பதால், அவர் மீது ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிகிறது.

# தங்கம் கிடைக்கும்

இங்கிலாந்தில்இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் ரென்னிஸ் போட்டிகளில் தங்கம் வெல்வதற்கான எண்ணத்தைக் கொண்டுள்ளதாக உலகின் மூன்றாம் நிலை வீரர் சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

எனக்கு இப்போது அதிக அழுத்தம் இல்லை. ஏற்கனவே இரட்டையர் பிரிவில் தங்கமொன்றைக் கைப்பற்றியுள்ளேன். அந்தத் தங்கத்தை வெல்லும் போது நாட்டுக்காக வென்றுகொடுத்த உணர்வு மிகச்சிறப்பாகக் காணப்பட்டது. இந்த முறை தங்கத்தை வெல்லாவிட்டால் ஏதாவதொன்றை இழந்த உணர்வு தனக்குக் காணப்படாது. என்னால் முடிந்தளவு எப்போதுமே முயற்சிப்பேன்.

ஒலிம்பிக் தொடர் மிகச்சிறப்பான ஒன்றாக அமையும். அதை மகிழ்வாக எதிர்கொள்ள விரும்புகின்றேன். அழுத்தங்களின் மத்தியில் இழக்க விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.



# வடமாகாண கால்பந்து ஹென்றியரசர் சம்பியன்

**விளையாட்டுச் செய்திகள்**

(வவுனியா)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான வட மாகாண மட்ட கால்பந்துப் போட்டித் தொடரில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனானது.

வடக்குமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் 15 வயதுப் பிரிவு அணி களுக்கிடையிலான ஆட்டம் வவுனியா நகர சபை மைதானத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

இப்பிரிவின் இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், அளவெட்டி அருணோ தயாக் கல்லூரி அணியும் மோதின.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆட் டத்தில் சம்பியன் பட்டம் வென்றதுடன் கால்பந்தாட்டத்தில் எப்பொழுதுமே வலுவாகத் திகழும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியின் ஆட்டமும், அதன் வியூகமும் இறுதிப் போட்டி அளவெட்டி அருணோ-தயாக் கல்லூரி அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தது. இருப்பினும் அந்த நெருக்கடிகளை ஓரளவேனும் தாக்குப்பிடித்து மிகப் பலம் வாய்ந்த அணிகளான இரு அணிகளுமே மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியின் ஆதிக்கமே அதிகம் இருந்தது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று வடக்கு மாகாண சம்பியனாகத் தெரிவானது.

இப்போட்டி பார்வையாளர்களை மிகவும் கவர்ந்திருந் தமை குறிப்பிடத்தக்கது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணி பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு வீரர்களை உற்சா கப்படுத்தினர். (12, 93)

## நீச்சலில் வென்றார் தங்கம்




கொழும்பு தேர்ஸ்டன் வித்தியாலய நீச்சல் தடாகத்தில் கடந்த 8-10ஆம் திகதி வரை அகில இலங்கை பாடசாலை களுக்கிடையில் நடைபெற்ற மகிந்த ராஜபக்ஷ சம்பியன்ஷிப் 2012 நீச்சல் போட்டிகளில் கொழும்பு விவேகானந்தா கல்லூ ரியைச் சேர்ந்த மாணவன் ஜெய்சங்கர் ஹக்ஸன் இரண்டு தங்கப் பதக்கங்களை சுவீகரித்தார்.

8 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளில் பங்குபற்றிய ஜெய்சங்கர் ஹக்ஸன் தனது அசாத்திய திறமைகளை வெளிப்படுத்தி 25 மீற்றர் வண்ணத்துப்பூச்சி (பட்டர்பிளை), 25 மீற்றர் மார்தட்டு நீச்சல் (ப்றேஸ்ட் ஸ்ரோக்) ஆகிய இரண்டு போட்டிகளிலும் தங்கப் பதக்கங்களை சுவீகரித்து பாடசாலை வரலாற்றில் நீச்சல் போட்டிகளில் பிரகாசித்த முதலாவது மாணவர் என்ற கௌரவத்தை தன்வசப்படுத்திக்கொண்டார்.

25 மீற்றர் பட்டர்பிளை போட்டியை 22.44 செக்கன்களில் நிறைவு செய்துசனிக்கிழமை தனது முதலாவது தங்கப்பதக் கத்தை வென்றெடுத்த ஹக்ஸன், ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற 25 மீற்றர் ப்றேஸ்ட் ஸ்ரோக் போட்டியில் 26.23 செக் கன்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து கல்லூரிக்கு இரண்டாவது தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்தார். தேர்ஸ்டன் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப் போட்டிகளில் நாடு தழுவிய ரீதியிலிருந்த நிலையி-லேயே அவர் தமது கல்லூரி சார்பாக திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் கரப்பந்தாட்டம்

(கிளிநொச்சி)

பாடசாலைகள், பாடசாலை விளையாட்டுக் கழகங்கள், இராணுவம் ஆகிவற்றுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டி கள் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் பாடசாலை மாணவர்களினதும், இளைஞர் யுவதிகளினதும், இராணுவ வீரர்களின்தும், விளையாட்டுத் திறமைகளை வளர்த்தல், நல்லெண்ணத்தை வளர்த்தல் போன்றவற்றை அடிப்படையாகக். கொண்டே இப்போட்டித் தொடர் நடத்தத் திட்டமிட்டோம் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்.

பாதுகாப்பு சேவை கட்டளைத் தளபதியின் ஆலோசனை யின் பேரில் இது ஏற்பாடாகியுள்ளது. கிளிநொச்சி பாது காப்பு சேவை தலைமையகம் இப்போட்டிகளை சிறப்பாக நடத்தி பணப் பரிசில்களையும், கிண்ணங்களையும் சான்றி தழ்களையும் வழங்கும்.

## உதைபந்தாட்டச் சுற்று வவுனியா ஈகிள் தோல்வி

(அநுராதபுரம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப் படும் எப்.ஏ.கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டம் ஒன்று அண்மையில் அநுராதபுரம் சிறைச்சாலை மைதானத்தில் இடம்பெற்றது.

அநுராதபுரம் சொலிட் அணியும், வவுனியா ஈகிள் அணி யும் கலந்து கொண்ட இப்போட்டியில் அநுராதபுரம் சொலிட் அணி 15 : 1 கோலினால் அபார வெற்றியீட்டியது.

போட்டிக்கு நடுவர்களாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடுவர்களாக எஸ்.எம்.ஜிப்ரி, ஐ.எஸ்.ஜே. குலேந்திரன், ஏ.ஏ.எம்.கியாஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

## ஜே.பி.எல்.இன் இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் இன்றைய தினம் இரண்டு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக் கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங் களில் நடைபெற்று வருகின்றது.

இதன்படி இன்றைய தினம் காலை இடம்பெறும் முதல் போட்டியில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து கிறாஸ் ஹோப்பெர்ஸ் அணியும், மதியம் 1.30 மணியளவில் இடம்பெறும் இரண்டாவது போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, இவ் ஆட்டங்களுடன் லீக் சுற்றுப் போட்டிகள் யாவும் நிறை வடையும். இதன்படி 'ஏ', 'பி' இரண்டு பிரிவுகளாக இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரில் ஒவ்வொரு பிரி விலிருந்தும் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் நாளைய தினம் இடம்பெறும் அரையிறுதிப் போட்டி யில் மோதவுள்ளன என போட்டி ஏற் பாட்டளார்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரின் மூன்றாமிடம் மற்றும் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் என போட்டி ஏற்பாட்டளார்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள எட்டு முன்னணி அணி கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் வாழ்க்கைத் தேவைகள் பற்றி அக்கறையில்லாதவர்களிடம் மாகாண அதிகாரம் செல்வதில் என்ன பயன்?



வடக்கு மாகாண சபை தேர்தலை இன்னமும் தள்ளி வைக்காமல், உடனடியாக நடத்தி வைக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு - இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தேர்தலை தள்ளி வைப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுவதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. அரசும் தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் வாக்காளர் சேர்க்கை போன்ற பணிகள் முடிவடைந்ததும் தேர்தலை நடத்தப் போவதாக கூறி வருகிறது.

இதன் சாராம்சம் என்ன? வடக்கு மாகாண சபை தேர்தலால் யாருக்கு என்ன பயன்? குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்டு, வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து வாழ்க்கையை போராட்டமாகவே நடாத்தி வரும் தமிழ் சமுதாயம் நேரடியாக அடையப் போகும் பயன் என்ன?

வடக்கு வாழ் மக்களை பொறுத்த வரையில் அவர்களது அன்றாடத் தேவைகளுக்கு குறைவே இல்லை. இன்றைய சூழ்நிலையில் அரசாங்கத்தினால் மட்டுமே அவர்களது தேவைகளுக்கான வடிகால்களை அமைத்துக் கொடுக்க முடியும். அது மத்தியில் இருந்தாலும் மாகாண அரசாங்கமாக இருந்தாலும் நிதி நிறைந்த அரசாங்கத்தால் மட்டுமே அவர்களது தேவைகளுக்கு ஈடு கொடுக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல் முடிந்து வடக்கில் பதவிக்கு வரும் அரசு, ஒன்றில் மத்திய அரசோடு சேர்ந்து செயலாற்றி, தங்களது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முயல வேண்டும். இல்லையென்றால், எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை கூறியே தங்களது பதவிக் காலத்தை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். அதன் அடிப்படையிலேயே அடுத்த முறையும் மக்கள் வாக்களித்தால், மீண்டும் ஆட்சிக்கு வந்து செயற்பட முயல வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல்களில் கூட்டமைப்பே வட மாகாண மக்களின் நம்பிக்கையை அதிகமாக பெற்றிருந்தது. அந்த ஆதரவு தொடருமேயானால் வட மாகாண சபையில் கூட்டமைப்பு ஆட்சிக்கு வரும் வாய்ப்புகள் அதிகம். ஆனால் ஆட்சிக்கு வந்த பின் கூட்டமைப்பும் அதன் அமைச்சர்களும் சாதிக்கப் போவது என்ன? இது குறித்து மக்கள் தெளிவாக இல்லை என்றாலும், கூட்டமைப்பு அரசியலை புறம் தள்ளி, மக்களுக்கு பயனுள்ள திட்டங்களை முன் வைத்து தேர்தல் களத்தில் இறங்க வேண்டும்.

ஆனால், அண்மைக்காலத்தில் கூட்டமைப்பின் உட்கட்சி விவகாரங்கள் அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துமா என்ற கேள்வியையே எழுப்புகிறது. உதாரணத்திற்கு, கூட்டமைப்பின் ஒரு தலைவருக்கு எதிராக அண்மைக் காலத்தில் உருவபொம்மைகள் மூலம் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னால் யார் இருந்தார்கள் என்பது ஒரு கேள்வி. ஆனால், அது குறித்து கூட்டமைப்பின் எந்தவொரு தலைவரும் கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. இதுவே, இந்த எதிர்ப்பிற்குப் பின்னால் கூட்டமைப்பின் சில - பல தலைவர்கள் இருந்தார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது. எது எப்படியோ, இந்தப் போராட்டத்தை கூட்டமைப்பு தலைவர்களும் ரசித்தார்களோ என்ற கேள்வியும் உடன் எழும்புகிறது.

"மே தினம்" அன்று யாழ்ப்பாணத்தில் அரங்கேறிய "கொடிப் பிரச்சினை" உள்கட்சி விவகாரங்களை, விவகாரமாகவும் விவாத விடயமாகவும் வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியது. அதைவிட முக்கியமாக, வட மாகாண மக்களின் அன்றாட பிரச்சினைகளை விட, கூட்டமைப்பு தலைவர்களுக்கு இன்னமும் உணர்வு பூர்வமான அரசியல் பிரச்சினையிலேயே நாட்டம் அதிகம் என்ற எண்ணத்தையும் வெளியுலகில் ஏற்படுத்தியது.

இத்தகைய பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவித்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் - சம்பந்தன், சுமந்திரன் போன்ற தலைவர்கள் வடக்கு மாகாணத்தில் வாழ்ந்து வராத காரணத்தால் அவற்றின் தாக்கத்தை சரியாக உணர்ந்து கொண்டு செயற்பட முடியவில்லை என்பது போன்று கருத்தை வெளியிட்டுள்ளதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. அவரது கூற்று உண்மை என்றால், அவரது கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமேயானால் "வடக்கு மாகாணத்தவர்" மற்றும் "பிற பகுதி தமிழர்கள்" என்ற பிரிவினையையும் இது தோற்றுவிக்கிறது. இது தான், தமிழர் அரசியலுக்கு எதிரான எண்ணம் கொண்டவர்கள் எதிர்பார்ப்பதும் கூட.

தற்போது, கிழக்கு மாகாண சபைக்கு அடுத்த சுற்று தேர்தல் நடத்த அரசு முடிவு எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் பின்னணியில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தனித்தனி தேர்தல்களை அரசு நடத்துமேயானால், அவற்றில் கூட்டமைப்பு போட்டியிடும் விடயத்தில் என்ன முடிவு எடுக்கும் என்பது தற்போதைக்காவது புதிராகவே உள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் கிழக்கு மாகாண சபையில் கூட்டமைப்போ பிற தமிழ் கட்சிகளோ ஆளுமை செலுத்த முடியாத விதத்தில் மாற்று அரசு ஒன்று அமையுமேயானால், அதன் பிறகு வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற பேச்சிற்கே இடமில்லை என்றாகிவிடும்.

கூட்டமைப்பின் பிரச்சினை இத்தோடு நின்று போகாது. "இனப் போர்" காலகட்டம் முழுவதுமாக, கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக, அரசுடனும் அரசாங்க அலுவலர்களுடனும் ஒட்டோ உறவோ இல்லாமலே அவர்கள் அரசியல் செய்து வந்துள்ளார்கள். போர் முடிந்த பின்னரும் அவர்கள் இந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஏன், கட்சியின் முக்கிய பொறுப்புகளில் அல்லது கருத்து கூறும் நிலைகளில் அரசு அதிகாரிகளாக அனுபவம் உள்ள தமிழர்கள் இருப்பதாகவும் கருத இடமில்லை.

ஆனால், நாடாளுமன்ற உரைகளில் கூட, கூட்டமைப்பு உறுப்பினர்கள் உரிமை குறித்து குரல் எழுப்பி வருகிறார்களே தவிர, மக்களின் வாழ்க்கைத் தேவைகள் குறித்து ஆழமாக ஆலோசித்து, அது குறித்த விவரங்களை பட்டியலிட்டு பேசியதில்லை.

- என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.

# அலுவலகத்தில் தூக்கமா ஆடுங்கள்!




வீட்டில் ஓய்வாக இருந்தால், மதிய உணவுக்குப் பின், குட்டியாக ஒரு தூக்கம் போடலாம். அலுவலகத்தில் இருக்கும்போது, குட்டித் தூக்கத்தை எதிர்பார்க்க முடியுமா? மதிய உணவு சாப்பிட்ட பின், இருக்கையில் அமர்ந்தால், அப்படியே கொஞ்ச நேரத்துக்கு, கண்ணை கட்டும். தூக்கத்தை கட்டுப்படுத்த முடியாத சிலர், இருக்கையில் அமர்ந்தபடியே, மெல்ல, மெல்ல, சாமியாடத் தொடங்கி விடுவர். அடுத்த சில மணி நேரத்துக்கு, இந்த இன்ப அவஸ்தை தொடரும்.

நம் நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ளதுதான் இந்த பிரச்சினை. இதற்கு, சுவீடன் நாட்டில், அருமையான ஒரு தீர்வை கண்டுபிடித்துள்ளனர். தலைநகர் ஸ்டாக்ஹோமில், அலுவலகங்கள் அமைந்துள்ள இடத்துக்கு மையப் பகுதியில், "லஞ்ச் டான்ஸ் கிளப்" என்ற ஒரு இடம் உள்ளது. அக்கம், பக்க அலுவலகத்தில் இருப்பவர்கள் எல்லாம், மதிய உணவுக்குப் பின், இங்கு கூடி விடுவர். அந்த அறை, நைட் கிளப் போல், அலங்கரிக்கப்பட்டு இருக்கும்.

மிகப் பெரிய ஸ்பீக்கர்களில், துள்ளலான இசை ஒலித்துக் கொண்டே இருக்கும். பிறகென்ன? அடுத்த ஒரு மணி நேரத்துக்கு, அங்கு ஆட்டம், களை கட்டும். ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல், அலுவலகங்களில் பணியாற்றும் ஏராளமானோர், அங்கு வந்து ஒரு மணி நேரத்துக்கு ஆட்டம் போட்டு விட்டு, அதன் பின், நல்ல பிள்ளைகளாக, அலுவலகத்துக்கு பணியாற்றச் சென்று விடுவர். இந்த ஆட்டத்தால், தூக்கம் கலைவதோடு, மனதுக்கும், உடலுக்கும் புத்துணர்ச்சி கிடைப்பதாக கூறுகின்றனர் ஊழியர்கள். இதற்கு நுழைவுக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. சுவீடனின் மற்ற நகரங்களுக்கும், இந்த லஞ்ச் டான்ஸ் கலாசாரம் வேகமாகப் பரவி வருகிறது.

# பட்டம் கொடுத்தவர்கள்



- காந்திக்கு "மகாத்மா" பட்டம் கொடுத்தவர் ரவீந்திரநாத் தாகூர்.
- தாகூருக்கு "குருதேவ்" பட்டம் கொடுத்தவர் காந்தியடிகள்.
- காந்திக்கு "தேசப்பிதா" பட்டம் கொடுத்தவர் சுபாஷ் சந்திரபோஸ்.
- சுபாஷ் சந்திரபோஸுக்கு "நேதாஜி" பட்டம் கொடுத்தவர் காந்தியடிகள்.
- உ.வே.சா.விற்கு "தமிழ் தாத்தா" பட்டம் கொடுத்தவர் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி.
- கம்பருக்கு "கவிச்சக்கரவர்த்தி" பட்டம் கொடுத்தவர் நாதமுனி.
- தேசிக விநாயகம் பிள்ளைக்கு "கவிமணி" பட்டம் கொடுத்தவர் ராஜா அண்ணாமலை செட்டியார்.
- வ.உ.சி.க்கு "கப்பலோட்டிய தமிழன்" பட்டம் கொடுத்தவர் ம.பொ.சி.
- டி.கே.சண்முகத்திற்கு "ஒளவை சண்முகம்" என்று பட்டம் கொடுத்தவர் ஆர்.கே.சண்முகம் செட்டியார்.
- என்.எஸ்.கிருஷ்ணனுக்கு "கலைவாணர்" பட்டம் கொடுத்தது நடராஜா கல்விக்கழகம்.





பிரிட்டன் இளவரசி கேட் வில்லியமின் திருமணத்துக்குப் பின், அவரது தங்கை பிப்பா மிடில்டனும், உலகம் முழுவதும் பிரபலமாகி விட்டார். இளவரசர் வில்லியமின் சகோதரர் ஹரிக்கும், பிப்பாவுக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளதாகவும், இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும், பிரிட்டன் ஊடகங்கள் பரபரப்பாக செய்திகளை வெளியிட்டன. அதற்கு ஏற்றாற்போல், இருவரும் ஜோடியாக சேர்ந்து, வெளி இடங்களில் சுற்றினர். ஆனால், இளவரசர் ஹரியுடனான காதலுக்கு, "டூ விட்டு விட்டார், பிப்பா.

தன்னுடன், எடின்பேர்க் பல்கலையில் படித்த ஜோர்ஜ் பெர்சி என்பவருடன், ஊர் சுற்றி வருகிறார். ஜோர்ஜும், பிரிட்டனின் புகழ்பெற்ற பிரபுக்கள் வம்சத்தை சேர்ந்தவர் என்பதால், பிப்பாவின் பெற்றோர், இதைக் கண்டு கொள்ளவில்லை. இளவரசர் வில்லியம், தன் காதல் மனைவி கேட்டுடன், சமீபத்தில் பிரான்சில் உள்ள, மலைகள் சூழ்ந்த சுற்றுலா தலத்துக்கு சென்றிருந்தார்.

கேட்டின் பெற்றோரும் வந்திருந்தனர். இவர்களுடன், சிறப்பு அழைப்பாளர்களாக பிப்பாவும், அவரது மனம் கவர்ந்த ஜோர்ஜ் பெர்சியும் வந்திருந்தனர். இருவரும், பனி மலைகளில், பனிச் சறுக்கு விளையாடி மகிழ்ந்ததை, வில்லியமும், கேட்டும் பார்த்து கைதட்டி, ரசித்தனராம். அதாவது ஹரிக்கு இல்லை பிப்பா!

# நூற்றாண்டின் இறுதி... பெரும் பிரளயத்தை நோக்கி பூமி!



எதையும் தாங்கும் பூமிப் பந்து, இன்னும் எத்தனை நாளைக்கு அப்படி தாங்கிக் கொண்டிருக்கும்?

இந்த நூற்றாண்டின் இறுதி வரை-தான்... அதாவது இன்னும் ஒரு தொண்ணூறு ஆண்டுகள்தான் என்கிறது ஒரு ஆய்வு. அதன் பிறகு?

வெடித்துச் சிதறிவிடுமாம்...!

ஏன்? எப்படி? எப்போது?

விவரமாகப் பார்க்கலாம்...

மனிதன் தன் எதிர்காலத்தை மட்டுமல்ல, தன்னால் முடிந்த வரை என்னென்ன அக்கிரமங்களை இயற்கைக்கு எதிராக செய்ய முடியுமோ அத்தனையையும் வெட்கமே இல்லாமல் செய்துவிட்டு, பின்னர் அந்த இயற்கையின் எதிர்காலம் என்னவாக இருக்கும் எனத் தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் காட்டுகிறான்.

அதன் விளைவுதான் பூமியின் கடைசி நாள் எது என்ற ஆராய்ச்சி. தேவனின் வருகை, மாயன் நாள்காட்டி, புவி பனி-மயமாகி வெடித்துச் சிதறுதல், சூப்பர் நோவா என பல்வேறு விதங்களில்



"பூமியின் இறப்பு" இருக்கும் என கணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிலர் இந்த ஆண்டு ஒக்டோபருக்குள் எல்லாம் முடிந்தது என்றும் சொல்லிக் கொண்டுள்ளனர்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வு, இவை அனைத்தையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இந்த நூற்றாண்டின் இறுதிதான் பூமியின் கடைசி நாட்கள் என கணித்துள்ளது.

அப்படியென்றால் இன்னும் ஒரு 90 ஆண்டுகள்... அதற்குள் பூமி முடிந்துவிடுமாம்.

சுமார் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பனிப்பாறைகள் போன்றவை இல்லாத ஒரு உலகம் இருந்த நிலையை நோக்கி இப்பொழுது நமது பூமிப் பரப்பு நகர்ந்து கொண்டிருப்பதாகவும், நூற்றாண்டின் இறுதியில் அனேகமாக பூமியின் அமைவிடமே விசித்திரத்துக் குரியதாக மாறிவிடும் என்றும் அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் அன்ரனி போர்னோஸ்கி கூறுகையில், "எங்கள் ஆய்வு முடிவுகளின்படி இந்த நூற்றாண்டின் இறுதியில் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு மோசமான இயற்கைச் சூழல் நிலவும். பூமியின் இறுதி நாட்கள் மிகக் கோரமாக இருக்கும்" என்கிறார்.

இதற்கு போர்னோஸ்கியும், அவருடன் இணைந்து ஆய்வு மேற்கொண்ட 17 விஞ்ஞானிகளும் சொல்லும் காரணங்கள்... மிக மிக எதார்த்தமானவை. ஒப்புக் கொள்ளக் கூடியவையும் கூட!

இந்தப் பேரழிவுக்கு எந்த இயற்கை சீற்றமும் காரணமாக இருக்கப் போவதில்லை. மனிதனின் சுயநலமும் கொடூர புத்தியுமே காரணங்கள்.

உலகம் தாங்க முடியாத அளவுக்கு மக்கள் தொகை பெருகிவிட்டது. அவர்களின் பயன்பாடுகளோ, கணிப்புக்கு அப்பாற்பட்டதாகிவிட்டது.

நீர், காடுகள் மற்றும் விளை நிலங்கள் படிப்படியாகக் குறைந்து, எங்கும் தொழிற்சாலைகளும். அதன் விஷ எச்சங்களும் காணக் கிடைக்கும் நிலை. புவியின் இயல்நிலை படிப்படியாக மாறிவிட்டதன் விளைவு, இந்த பூமியின் வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்க உதவும் பனிப் பாறைகள் உருகி வருகின்றன.

கடந்த 3000 ஆண்டுகளில், 30 சதவீத பனியால் மூடப்பட்டிருந்த பூமி இப்போது கிட்டத்தட்ட பனிப்பாறைகள் இல்லாத நிலையை நோக்கி சென்று கொண்டுள்ளது. அடுத்த 90 ஆண்டுகளுக்குள் பனிப்பாறைகள் 0 சதவீதமாகிடுமாம்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கக் கோரி எத்தனை யோ இயக்கங்கள் போராடி-னாலும், தனி மனிதர்கள் குரல் கொடுத்தாலும், அவை எடுபடாமலே போய்விட்டன. தன் தேவைக்காக மனிதர்களும் நிறுவனங்களும் அரசுகளும் எடுக்கும் முடிவுகள் அனைத்துமே இயற்கைக்கு எதிரானவையாகவே உள்ளதுதான் இதற்குக் காரணம்.

இவர்கள் மட்டுமல்ல... புவி வெப்பமயமாதல் மற்றும் சூழலியல் தொடர்பான விஞ்ஞானிகள் பலரும் இன்னும் அதிர்ச்சியூட்டும் ஆருடங்களை வெளியிட்டு வருகின்றனர். நம் கண்கூடே நேற்று நாம் பார்த்த பறவையினங்களும் தாவர இனங்களும் காட்சிப் பொருளாகிவிட்ட நிலையில் இனிவரும் காலங்களும் இப்படித்தான் இருக்குமாம்! பல விலங்கினங்கள், தாவர இனங்கள் பூண்டோடு அழிந்து போவது மட்டுமல்ல.. புதிய புதிய விலங்கினங்களும் தாவர இனங்களும் விஸ்வரூபமாக பிறப்பெடுத்து பேரிடர்களுக்கு வழி-வகை செய்யக் கூடிய சாத்தியங்களும் இருக்கின்றனவாம்.

நாம் இப்பொழுது பனிப்பாறைகளின் கடைசி யுகத்தில் நின்று கொண்டிருக்கிறோம்.. இன்னும் சிறிதுகாலம்தான்... பனிப்பாறைகள் இல்லாத ஒரு உலகம் உருவாகிவிடக் கூடும். தொழில்துறை வளர்ச்சியினால் வளிமண்டத்தில் 35 வீத அளவுக்கு கரியமில வாயுவை செலுத்தியிருப்பதும் இதற்கு முக்கிய காரணமாக சொல்லலாம்.

பூமிப்பரப்பில் இப்பொழுது 43 சதவீதம் நகரங்களாகவும் விளைநிலங்களாகவும் இருந்தது. இப்போது விளை நிலங்கள் வேகமாக குறைந்து வருகின்றன.

காடுகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய இயற்கை வளங்களும் பெருகிவரும் மக்கள் தொகையால் நிச்சயம் வேட்டையாடப்பட்டு பூமிப் பந்து பிரளயத்தை எதிர்நோக்குவது நிச்சயம் என்கிறது இந்த விஞ்ஞானிகளின் ஆய்வு.

ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி வந்து இந்த பேரழிவை ஒரு நாளிலோ சில நாட்களிலோ நடத்தப் போவதில்லை. எல்லாம் படிப்படியாக நிகழும்... நம் கண்முன்னேயே நடக்கும். தினசரி செய்திகளாக அவற்றைப் படித்து அதிர்ந்து அடங்கி பேரழிவில் இந்த உலகம் நிற்கும். இதைத் தடுத்து நிறுத்தும் சக்தி இனி மனிதனுக்கு இல்லை. வேண்டுமானாலும் சில பத்தாண்டுகள் அதைத் தள்ளிப் போடலாம்...

இருக்கிற வளங்களைக் காக்க முயற்சிக்கலாம். மின்சாரம் உள்ளிட்ட ஆற்றலை குறைவாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தலாம். அதேபோல ஆற்றல் உற்பத்தி முறைகளை மாற்றலாம். அணு விஞ்ஞானம், அனல் மின்சார உற்பத்தி போன்றவற்றை அடியோடு நிறுத்திக் கொண்டு, மறுசுழற்சி முறையில் பயன்படும் பொருள்களை வைத்து ஆற்றல் உற்பத்தி செய்யலாம்.

இதையெல்லாம் இப்போது கூட கடைப்பிடிக்க மனிதர்கள் முன்வராவிட்டால், வரும் 2050இல் 9 பில்லியனாக மக்கள் தொகை உயரும்போது, தன் தேவைக்காக மனிதனை மனிதனே அடித்துக் கொல்லும் நிலை கூட உருவாகலாம்.

ஒட்டத்தில் காணாமல் போன உயிரினங்களின் பட்டியலில் மனிதனும் கூட இடம்பெறலாம்!

## சினிமா சினிமா



ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த, "விண்ணைத் தாண்டி வருவாயா" படத்தின் பாடல்களுக்கான உரிமை, 1.75 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால், இப்போது அதே கவுதம் மேனன் இயக்கியுள்ள, "நீதானே என் பொன் வசந்தம்" படத்தின் பாடல் உரிமை, இரண்டு கோடி ரூபாய்க்கு பேசப்பட்டு வருகிறது. இப்படத்துக்கு இசையமைத்திருப்பவர் இளையராஜா.

இப்போது தமிழ்த் திரையுலகில் பட்டப் பெயர்களைத் துறக்கும் காலம்! ஆரம்பித்து வைத்தவர் அஜீத். அஜீத்தே, "அல்டிமேட்" என்ற



அடைமொழியை நீக்கிய பின், எனக்கு எதற்கு பட்டப்பெயர்... என்று, தன் பெயருக்கு முன் போட்டிருந்த, "புரட்சித் தளபதி" என்ற பெயரை நீக்கி விட்டார் விஷால். விஷாலைப் பார்த்து, பரத்தும், புரட்சித் தளபதியே போனபிறகு எதற்கு "சின்னத் தளபதி" என்று தன் பட்டப் பெயரையும் நீக்கி விட்டார்.



முன்னணி நடிகைகள் பலரும் விதவிதமான ஆடைகளை அணிந்து தோற்றமளிப்பதைத்தான் விரும்புவர். ஆனால் தேசிய விருது பெற்ற "த டேர்ட்டி பிக்சர்" வித்யா பாலனோ சேலை அணிவதைத்தான் விரும்புகிறார். விதவிதமான சேலைகளை அணிய வேண்டும் என்பதற்காகத்தான் கடவுள் என்னைப் பெண்ணாகப் படைத்திருக்கிறார் அதனால் சேலைதான் எப்போதும் என்னுடைய விருப்ப உடை என்கிறார் வித்யா.

அமிதாப் பச்சன், ஷாருக்கான், சல்மான் கான் ஆகியோரின் தொலைக்காட்சி "டோக் ஷோ"க்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி டி.ஆர்.பி.யில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது அமீர்கானின் "சத்யமேவ ஜெயதே" நிகழ்ச்சி. உண்மையான சமூக அக்கறையுடன் உருவாக்கப்பட்டு கோடிக்கணக்கான ரசிகர்களைப் பெற்றுள்ள இந்த நிகழ்ச்சி ஹிந்தி, தமிழ், மலையாளம், தெலுங்கு, பெங்காலி, மராத்தி உட்பட ஒன்பது மொழிகளில்



ஒளிபரப்பாகிறது. ஒன்றுக்கு ஆறு மடங்காக விளம்பர வருமானம் கொட்டுவதால் இந்த நிகழ்ச்சிக்கு விளம்பரம் தர நிறுவனங்களிடையே கடும் போட்டி நிலவுகிறது.

ரஜினிகாந்தின் "கோச்சடையான்" படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துவிட்டது. கிரா.்.பிக்ஸ், அனிமேஷன் உட்பட இறுதிக் கட்டப் பணிகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் நடைபெறுவதால் மூன்று நாடுகளுக்கும் மாறி மாறி பறக்கவிருக்கிறது படக்குழு. தீபாவளிக்குப் படத்தை வெளியிட வேண்டும் என நினைத்திருக்கிறார் இயக்குநர் சௌந்தர்யா..



## நிமிர்வு

விழித்திரு
இன்றையத் தியான அமர்வில்
எல்லையின்மை
தன் குரலை
ஓங்கி முரசறையலாம்.


உயர் மலையின்
சமிக்ஞை வாங்கியாய்
அகம் திறந்திரு
பிரபஞ்சப் பேருணர்வின்
மீட்டல் நிகழலாம்.

எய்தும் பெரும் பிறப்பில்
சிறுமை கழன்று
உதிர
எழுந்து நில்
செயலாண்மை பொதிய நட
நிமிர்வின்
செங்கோன்மை நினதாகலாம்.

இதோ!
நிமிர்வின் தேவபாட்டையில்
உன் பின்னால்
ஆயிரம் காலடிகள், சப்திக்காமல்.



- சு. வில்வரத்தினம்



# இசை எளிமையானது... அதை நாம்தான் சிக்கலாக்கிவிட்டோம்!

– இளையராஜா.



**இசைஞானி இளையராஜாவின் 'பால்நிலாப் பாதை', 'எனக்கு எதுவோ உனக்கும் அதுவே' ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழாவில், இளையராஜா வழங்கிய ஏற்புரையிலிருந்து:**

"ஏற்புரை என்றால்... இங்கே என்னவெல்லாம் நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்வது. சின்ன வயதில் வாத்தியார், 'முட்டாளே... அறிவுகெட்டவனே...' என்றார். அது பிடித்ததோ பிடிக்கவில்லையோ ஏற்றுக்கொண்டேன். வீட்டிலும் அண்ணன் மிகவும் திட்டுவார்கள், 'கருவாயா, மடையா, அறிவிருக்கா உனக்கு?' என்று. ஏற்றுக்கொண்டேன். இன்று இங்கும் நிறைய விஷயங்கள் நடந்தன. எப்போதும் புகழ் மொழிகள் மனதுக்கு இதமாகத்தான் இருக்கும்.

ஒருமுறை தேவர்களுக்கும் ஒரு அரக்கனுக்கும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சண்டை பல வருடங்களாக நடந்துகொண்டிருக்கிறது.

அந்த அரக்கனை எப்படி வீழ்த்துவது என்று யாருக்கும் தெரியவில்லை. அதனால் தேவர்கள் கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று வழி கேட்கின்றனர். 'அவனை புகழத் தொடங்குங்கள். ஏனென்றால் ஒரு-வனைப் புகழப் புகழ அவனுக்குத் தான் பெரிய ஆள் என்ற நினைப்பு வந்துவிடும். அதுவே அவன் வீழ்ச்சிக்கு வித்திடும்' என்றார் கிருஷ்ண பரமாத்மா.

இதை ஏன் சொல்கிறேனென்றால், புகழ் என்பதைத் தாங்கிக் கொள்வது மிகவும் கஷ்டம். இந்தப் புகழ் என்பது ஒன்றுமில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

மொழியை விட இசை உயர்ந்தது என்று சொல்லலாம். உதாரணத்திற்கு 'கமல்ஹாசன்' என்று இருக்கும் பெயரை நீங்கள் தலைகீழாக படிக்க முடியுமா? அல்லது அப்படித் தலைகீழாகத்தான் அவரை பெயர் சொல்லி அழைக்க முடியுமா? ஆனால் 'ச.. ரி.. க.. ம' என்ற ஸ்வரத்தை 'ம.. க.. ரி.. ச..' என்று பாடலாம். இசையால் கடந்த காலத்துக்கும் போகலாம். எதிர்காலத் துக்கும் போகலாம். மேலேயும் போகலாம். கீழேயும் போகலாம். இந்தப் பக்கமும் போகலாம். அந்தப் பக்கமும் போகலாம். எந்தப் பக்கமும் போகலாம்...

நாம் எவ்வளவோ படிக்கிறோம்.

> **ஒருவேளை என் கிராமத்தில் இசை கற்றுக்கொடுப்பதற்கு யாரேனும் இருந்திருந்தால் நான் இசையமைப்பாளர் ஆகாமலேயே போயிருக்கலாம். இது நன்றாய் இருக்கிறதே... அது நன்றாய் இருக்கிறதே... என்று இசையைத் தேடிச் சென்று கேட்டுக் கேட்டுத் தாகத்துடன் வளர்ந்ததுதான் என்னை இங்கே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.**

ஆனால் எது நம் மனதில் நிற்கிறது? அதுதான் உண்மையான விஷயம். 'இவர் பாமரனுக்கும் புரியும் வகையில் இசையமைத்தார்' என்று ஏதோ பெரிய மலையை நான் முறித்து விட்டது போலப் பேசுகின்றனர்.

ஆனால் இசை என்பது அவ்வளவு கடினமான விஷயம் அல்ல. இசை எளிமையானது... அதை நாம்தான் சிக்கலாக்கிவிட்டோம்!

போன மாதம் எனக்கு லண்டனில் ஒலிப்பதிவு இருந்தது. ஒரு நாலுபேர் பாடுவதற்கு வந்திருந்தனர். அவர்கள் காலையிலேயே வந்துவிட்டனர். அவர்கள் மொத்தம் பாடவேண்டியிருந்த பகுதி ஒரு எட்டு 'பார்' மட்டுமே. அதைப் பாடுவதற்கு அவர்கள் காலையில் இருந்து பயிற்சி எடுத்து எடுத்து, கடைசியில் மைக் முன்னால் வந்து நின்றதும் நான் எழுதியிருந்ததைப் போல அவர்களால் பாட முடியாமல் போயிற்று.

அதன்பின்பு நான் அவர்களை அனுப்பச் சொல்லிவிட்டு அந்த நாலு குரல்களையும் நானே நான்கு ட்ராக்குகளில் பாடிமுடித்துவிட்டு ஐந்து நிமிடங்களில் வெளியே வந்துவிட்டேன். அங்கே எனக்கு 3 உதவியாளர்கள் இருந்தனர். அவர்கள் மூவரும் கம்போஸர்கள். அவர்களுள் ஒரு பெண்மணி ப்ரோட்வே மியூசிக்கில் கம்போஸ் செய்பவர். நான் பாடி முடித்து வெளியே வந்து பார்த்தால், அந்தப் பெண்மணி அழுதுகொண்டிருந்தாள். முகமெல்லாம் சிவந்திருந்தது. "You made it very simple. Music is that much simple. They made it complicated. They wasted the whole day just for 8 Bars" என்றாள் அழுதுகொண்டே!

ஆக, இசை என்பது எளிமையாகத்தான் இருக்கிறது. எளிமையான விஷயத்தைப் புரிந்து கொள்வதில் என்ன கஷ்டம்? 'என் பாடல்களைக் கேளுங்கள்' என்று நான் யாரிடமாவது போய்ச் சொல்ல முடியுமா? அல்லது யாருமேதான் அப்படிச் சொல்லிவிடமுடியுமா?

இங்கே எனக்கு என் அம்மாவின் படத்தைப் பரிசாகக் கொடுத்தார்கள். எந்தப் புகைப்படத்தைப் பார்த்து அதை வரைந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அது நான் எடுத்த புகைப்படம். அதை வரைந்து எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது எந்த சூழ்நிலையில் எடுக்கப்பட்ட புகைப்படம் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எனக்குச் சிறுவயதிலிருந்தே உடம்பு சரியில்லாமல் போனதே கிடையாது. ஆனால் மிகவும் பிஸியாக இருந்த ஒரு நேரத்தில் எனக்குத் தலைவலி வந்துவிட்டது. முதல்முறையாக அந்தச் சின்னத் தலைவலிக்காக டாக்டர் வந்து வீட்டில் பார்த்துவிட்டுச் சென்றார். 'டாக்டர் வந்தார்' என்றவுடன் அம்மா பதறிவிட்டார்கள். 'ஏம்பா.. உனக்குத் தலைவலியா?' என்று கண்ணீர் விட ஆரம்பித்துவிட்டார்கள். 'ஏம்மா? இந்தச் சின்ன விஷயத்துக்கு அழுகிறீர்கள். எனக்கு ஒன்றுமில்லை' என்று நான் அவர்களைச் சமாதானப்படுத்தி அமர வைத்து ஒரு புகைப்படம் எடுத்தேன். அந்தப் புகைப்படத்தைத்தான் வரைந்து இங்கே எனக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அந்தத் தாய் எதற்காக என்னை ஈன்றார்கள் என்று எனக்குத் தெரியாது. சின்ன வயதில் நிறைய ஆசைகள் இருக்கும். இசை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் எங்கே சென்று யாரிடம் கற்றுக்கொள்வது என்று தெரியாது. நான் பிறந்த கிராமத்தில் இசையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால் கூட அதைச் சொல்லிக் கொடுப்பதற்கு யாரும் இல்லை. அதனால்தான் 'தாகத்தை உண்டு பண்ணத் தண்ணீர் கொடுக்காதே' என்று நான் சொல்வதுண்டு.

ஒருவேளை என் கிராமத்தில் இசை கற்றுக்கொடுப்பதற்குயாரேனும் இருந்திருந்தால் நான் இசையமைப்பாளர் ஆகாமலேயே போயிருக்கலாம். இது நன்றாய் இருக்கிறதே... அது நன்றாய் இருக்கிறதே... என்று இசையைத் தேடிச் சென்று கேட்டுக் கேட்டுத் தாகத்துடன் வளர்ந்ததுதான் என்னை இங்கே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

'அம்மா.. நாங்கள் சென்னைக்குப் போகவேண்டும். எங்களுக்குப் பணம் கொடுங்கள்' என்று அம்மாவிடம் கேட்டபோது, வீட்டில் இருந்த ரேடியோவை விற்று 400 ரூபாய் கொடுத்தார்கள். அந்த 400 ரூபாயில் ஒரு 50 ரூபாயை தனக்கென்று வைத்துக்கொண்டு மிச்சத்தை எங்களிடம் கொடுத்திருக் கலாம் அல்லவா அந்தத் தாய்?

ஆனால் அப்படிக் கொடுக்கவில்லை. இதுதானே கல்வி. இதை யார் கற்றுக் கொடுத்துவிட முடியும்? எந்த யுனிவர்சிட்டியால் கற்றுத் தந்துவிடமுடியும்? அந்தத் தாயின் வயிற்றில் பிறந்த எங்களுக்கும், அந்த 400 ரூபாயில் ஒரு 200 ரூபாயை எடுத்து அம்மாவிடம் செலவுக்குக் கொடுத்துவிட்டு வருவோம் என்று தோன்றவில்லை. அந்தப் பண்பு வரவில்லை. அம்மா.. என்பது அம்மாதான். ஒரு வருடம் கோமாவில் இருந்து என் தாய் மரித்துப் போனார்கள். அத்துடன் என் கண்ணீர் எல்லாம் போய்விட்டது!

இதை எல்லாம் நான் உங்களிடம் பகிர்ந்து கொள்வது எதற்கென்றால், பிறந்த நாள் என்று சொல்லி என்னை அழைத்துவிட்டார்கள். இந்த நாளில் என்னைப் பெற்றவளை நினைக்காமல் நான் எப்படி இருக்க முடியும்?

வெண்பா என்பது புலவர்களுக்குப் புலி. அதாவது புலி மாதிரி புலவர்களை அடித்துவிடுமாம் இந்த வெண்பா. நானும் எழுதிப்பார்த்தேன். சரியாக வரவில்லை. அப்படியே தூக் கிப் போட்டுவிட்டேன். பின் மீண்டும் இதில் என்னதான் இருக்கிறது என்று எண்ணி எழுதிப் பார்த்தேன். வந்துவிட்டது. அதுதான் இந்தப் புத்தகமாக வெளிவருகிறது.

இந்த உலகம் கருத்துக்கள் சொல்பவர்களால் நிரம்பி வழிகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்கிறார்கள். எதை எடுத்துக்கொள்வது... எதைத் தள்ளுவது என்று தெரியவில்லை. இதெல்லாம் இல்லாமல் இறைவன் இசையைக் கொடுத்து 'இங்கேயே கிட' என்று என்னைப் பணித்துவிட் டான். அதற்கு நான் இறைவனுக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்?

இங்கே இறைவணக்கம் பாடிய குழந்தை மிகவும் அழகாகப் பாடி னாள். இப்படிப்பட்ட இசை இருந்தால் இறைவன் அதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

இசையைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது. நாம் பாடவேண்டாம். ஒரு இசையை மனதில் நினைத்தாலே எவ்வளவு இன்பம் பிறக்கிறது? 'தாலாட்ட வருவாளா'வாக இருக்கட்டும், 'தென்றல் வந்து தீண்டும்போது'வாக இருக்கட்டும், 'அம்மா என்றழைக்காத' வாக இருக்கட்டும், 'ஜனனி ஜனனி'யாக இருக்கட்டும்' பாடல்களை நினைத்தவுடனேயே உங்களுக்கு இன்பம் பிறக்கிறதா இல்லையா? அந்தப் பாடல் உங்களுக்கு உள்ளே ஓடுகிறதா இல்லையா? அதுதான் தியானம்.

நீங்கள் கோவிலுக்குச் சென்று இறைவனைக் கும்பிட்டாலும், ஒரு நிமிஷம் உங்கள் மனது உங்களிடத்தில் நிற்கிறதா? நம் மனது நிற்பதில்லை. ஆனால் நான்கு நிமிடம் ஒரு பாடலைக் கேட்டு உங்கள் மனது அப்படியே நிற்கிறது என்றால், அதை என்னவென்று சொல்வது?

இது எப்படி நடக்கிறது? நான் நடத்துகிறேனா? 'நான்கு நிமிடங்கள் நீங்கள் வேறெதுவும் நினைக்காமல் பாடலைக் கவனியுங்கள்' என்று நான் உங்களிடம் சொல்கிறேனா? அந்தப் பாடல் உங்களைப் பிடித்து இழுக்கிறது.

இசை என்பது அப்படிப்பட்ட சக்தி வாய்ந்தது. அது சுத்தமாக இருந்தால் அந்த சக்தி இருக்கும். சுத்தமாக இல்லையென்றால் அந்த சக்தி இருக்காது. எது சுத்தம், எது அசுத்தம் என்பது இசையில் கிடையாது. அபஸ்வரம் இல்லையென்றால் இசையே இல்லை. ஆனால் அபஸ்வரம் எந்த இடத்தில் இருக்கவேண்டுமோ அந்த இடத்தில் இருக்கவேண்டும். தூரத்தில் இருக்கவேண்டும்.

ஒரு கோபக்காரர் நம் எதிரில் வந்தால், 'இந்த ஆள் எதற்கு வந்தான்?' என்று நமக்குக் கோபம் வருகிறது. அந்தக் கோபம் அவனிடமிருந்தா நமக்கு வருகிறது? அந்தக் கோபம் அவன் நமக்குக் கொடுப்பதில்லை. தீதும் நன்றும் பிறர் தர வாரா.

இசை என்பது உலகில் உள்ள சகல ஜீவராசிகளின் இதயத் துடிப்பு. இதயம் என்பது ஒரு சீரான கதியில் துடிக்க வேண்டும். ஒருவருக்கு வேகமாக, ஒருவருக்கு மெதுவாக என ஏதாவது ஒரு தாளத்தில்தான் இதயம் துடிக்கிறது.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நடத்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் எதிர்பார்த்ததற்கும் மேலாக மிகவும் அமைதியாக, மனதுக்கு நிறைவாக நடந்தது. என் நன்றிகள்,' என்றார் இளையராஜா.

# அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தால் பழுதடையும் மின் உபகரணங்கள்

## - பாவனையாளர்கள் விசனம்

(கிரு-சிகரம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்தும் திடீர்,திடீர் என மின்சாரம் தடைப்படுவதன் காரணமாகவும் பின் திடீரென அதிக வலு கொண்ட மின்சாரம் வருவதன் காரணத்தினாலும் பல மின் பாவனையாளர்களது பெறுமதி வாய்ந்த மின்சார உபகரணங்கள் பழுதடைந்திருப்பதாக பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் நாள் ஒன்றிற்கு பல தடவைகள் மின்சாரம் தடைப்பட்டு பினனர் திடீரென மின்சாரம் மீண்டும் விநியோகிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பல பாகங்களிலும் உள்ள மின் பாவனையாளர்களது தொலைக்காட்சிப் பெட்டி, கணினி, குளிர்சாதனப்பெட்டி, வானொலி உள்ளிட்ட பல்வேறு பெறுமதி வாய்ந்த மின்சாதனப்பொருட்கள் பழுதடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மின்சாரத் தடை தொடர்பில் யாழ்.மின்சார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது



தற்போது யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் உயர் அழுத்த மின்உற்பத்தியை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களுக்கும் எடுத்துச்செல்லும் மின்கம்பங்கள், மின் கம்பிகள் இடம் மாற்றப்படுகின்றது இதனாலேயே திடீர் திடீர் என மின்சாரத்தினை தடைசெய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பழுதடைந்த பேருந்து சேவையால் மாணவர்கள் பெரும் அசௌகரியம்



(கிரு-சிகரம்)

அரச பஸ் தரிப்பிடத்தில் பஸ்களை இயக்க ஆரம்பிக்கும் போது அதிகளவில் புகை வெளியேறுவதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சேவையில் ஈடுபடும் பஸ்கள் பாவனைக்கு உகந்தவையாக இல்லை. ஆனால் புதிய பஸ்கள் கிடைக்காமையால் வேறுவழி இன்றி இயக்கப்பட்டு வருகின்றன.சில சந்தர்ப்பங்களில் பஸ்கள் இடைவழியில் நின்றுவிடுவதால் பயணிகள் கீழே இறங்கி தள்ளி இயக்க வேண்டிய பரிதாப நிலையும் காணப்படுகின்றது.

மேலும் பஸ் ஆசனங்களும் கிழிந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் பாடசாலை மாணவர்களும், பயணத்தினை மேற்கொள்ளும் பொதுப் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது அரசாங்க பஸ் வண்டிகள் மட்டுமில்லாது தனியார் பஸ் வண்டிகளிலும் இவ்வாறான நிலையே காணப்படுகிறது

பயணிகளுக்குஅசௌகரியங்களை ஏற்படுத்தாத நல்ல நிலையிலுள்ள பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# திறப்பு விழா

(கிரு, பகீ - சிகரம்)

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பண்ணை சுற்று வட்டத்திறப்பு விழா எதிர்வரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபையின் நகர துரித அபிவிருத்தித்திட்டமும் நகர்களை அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் பண்ணை சுற்று வட்டம் புதிதாக அமைக்கப்பட்டது.


அன்றையதினம் மரக்கன்று நாட்டிவைக்கும் வைபவமும் யாழ்.மாநகரசபையினரால் நடாத்தபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டு மரக்கறி வகைகளின் விலை தற்போது அதிகரிப்பு

(கிரு-சிகரம்)

யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. கடந்த சித்திரைப் புத்தாண்டுக் காலப்பகுதியின் போது மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்ததை அடுத்து அதன் உற்பத்தியை விவசாயிகள் நிறுத்திக்கொண்டதாலேயே தற்போது யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தற்போது நிலவும் வரட்சியான காலநிலை, எரிபொருள் விலையேற்றம் காரணமாக மரக்கறிகளின் உற்பத்தி மிகவும் பாதிக்






கப்பட்டுள்ளதாகவும் இதுவும் தற்போதை மரக்கறிகளின் விலை அதிகரிப்புக்கு காரணம் என வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

நேற்றைய தினம் யாழ் சந்தையில் லீக்ஸ் ஒரு கிலோ 200 ரூபாவாகவும், சின்ன வெங்காயம் 180 ரூபாவாகவும், பச்சை மிளகாய் - 240/=, தக்காளி - 180/=, முருங்கைக்காய் - 140/=, கிழங்கு - 160/=, கத்தரிக்காய் - 60/=, வெண்டிக்காய் - 90/= என்ற விலைகளில் மரக்கறிகள் விற்பனை செய் யப்பட்டன.

இவ்வாறான காரணங்களால் யாழ்ப்பாணச் சந்தை மட்டும் இல்லாது வன்னியின் சகல பாகங்களிலும் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் குறிப்பிட்டனர்.

# மெய்தான் பாருங்கோ...

## நன்மைக்கான செயற்பாடுகள்



“நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் வேறில்லை! நடந்ததையே நினைத்திருந்தால் மனதில் அமைதி என்றுமில்லை...” எண்டு ஒரு பழைய சினிமாப்பாட்டு இருக்குதல்லோ! கேள்விப்பட்டிருப்பியளே!

நாங்கள் ஆசைப்படுகிறதெல்லாம் நடந்து கொண்டிருந்தால் பிறகு தெய்வம் என்னத்துக்கு? சுவாமி என்னத்துக்கு? நினைச்சது நடக்காமல் ஏமாந்து போனால், பிறகு அதை நினைச்சு மனசுக்குள்ள அழுது குமைஞ்சு கொண்டிருக்கிறதால, எந்தவிதமான அனுகூலங்களும் ஏற்படப்போவதில்லை யெண்டு...நான் இப்ப சொன்ன உந்தச் சினிமாப்பாட்டு வரி நல்ல விளக்கமாச் சொல்லுதல்லோ!

ஆனாலும் பாருங்கோ! மனிச மனம் எண்டது எல்லாத்துக்கும் அவாப்பட்டுத்திரியத்தான் செய்யும். இதை ஒருமுகப்படுத்தி, ஒரு இடத்தில கட்டுப்படுத்தி வைச்சிருக்க எல்லாராலும் ஏலாதவிசயம் கண்டியளே!

உந்தப்பாட்டு வரியை எழுதினவன், தன்ர வாழ்க்கையில நல்லாப் பட்டுக்களைச்சுப் போய் ஒதுங்கின மனோநிலையில நிண்டு எழுதின மாதிரிக் கிடக்குது. நாங்கள் ஆசைப்பட்டு நினைக்கிறது ஆரம்பத்தில கிடைக்காட்டி அழுகையும், அந்தரிப்பு மாத்தான் கிடக்கும். ஆனா, அது ஏதோவொரு காரணத்துக் காகத்தான அப்பிடி நிகழுது...நடக்குது எண்டது வாழ்க்கையில அனுபவப்பட்டவை உணர்ந்து கொண்டாலும், உணர்ந்து கொண்ட எல்லாராலும் அந்தக்கணத்தில தாங்கிக்கொள்ளேலாமல் பதகளிப்பட்டிருக்கிறதை நான் பல இடங்களில பாத்திருக்கிறன் பாருங்கோ!.

ஒரு மனிசன்ர சராசரி எதிர்பார்ப்புக்களான அன்பு, பாசம், ஆதரவு... எண்டதெல்லாம் இன்னொரு மனிசரிடத்திலயிருந்துதான் கிடைக்கும் கண்டியளே! இந்த எதிர்பார்ப்பு ஆரம்பத்தில கிடைச்சும், பிறகு கிடைக்காமல் போற சந்தர்ப்பத்தில அந்த மனிசமனம் சஞ்சலப்பட்டு, வேதனைப்பட்டு தனக்குள்ள விம்மியழத்தான் செய்யும். இதுக்கு ஆண் - பெண்ணென்ற பேதமோ? வயசு வேறுபாடோ கிடையாது கண்டியளே!.

அடுத்தவனுக்கு மனசாலகூட தீங்குசெய்ய விரும்பாமல் நீதிக்கும், நியாயத்துக்கும் பயந்து அன்புணர்வோடை வாழுற ஒருத்தனுக்கு நிகழ்காலம் அவனை எந்தப்பிரச்சினையளுக்கையும் சிக்க விடாமல் காத்து வழிநடத்தப்பாக்கும் எண்டது ஒரு சூட்சுமமான விசயம்!.

வாழ்க்கையெண்ட பயணத்தில, நாங்கள் போய்க் கொண்டிருக்கேக்கை எங்கட சில எதிர்பார்ப்புகளை அடுத்தவையிட்டை எதிர்பாத்து நிற்க அவை கிடைக்காமல் போகிடுது. சிலபேரால கிடைக்கவும் செய்யுது. நாங்கள் விரும்பியதைத் தராமல் போற ஆட்களை அப்படியே கைகழுவி விட்டிட வேணும். ஏனெண்டால் அவையளாலை பிற்காலத்துக்கு ஏதாவது இன்னல்கள், இடைஞ்சல்கள் வருமாக இருந்தால், எமக்கான இன்றைய நிகழ்காலம் அதை நடைமுறைப்படுத்த விரும்பாமல் தட்டிக்கழிச்சுப் போயிடும்.

என்ர அனுபவங்களில உப்பிடியான சம்பவங்கள் நிறைய நடந்திருக்குது பாருங்கோ! சின்ன வயசிலயிருந்து... இளந்தாரியாகி... பிறகு குடும்பகாரனாப் போனாப்பிறகும், சில எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் போகேக்கை மனசு பெரிய அந்தரப்பட்டுக்கொள்ளும். பிறகு கடந்த கால அனுபவங்களை நினைக்கேக்கை... அந்த வலி... அந்த வேதனை... மெல்ல; மெல்லக் கலைஞ்சு; மறைஞ்சு போயிடும்!

சின்னவயசில பாருங்கோ! நான் பொடியயோடை கூடிவிளையாடேக்கை சில பொடியளின்ர படிக்கவழக்கம் சரியில்லை. இருந்தாலும், அப்புச்சி - அம்மாச்சிக்குத் தெரியாமல் நான் அந்த பொடியளோடை விளையாடப் போனால் அவங்கள் பெரும்பாலும் என்னைச் சேக்கிறேல்லை. எனக்கு அந்தப் பிஞ்சு வயசில அழுகையாவரும். எட்டநிண்டு அவங்கள் விளையாடுறதைப் பாத்திட்டு வீட்டை வந்திடுவன்.

இண்டைக்கு அந்தச் சம்பவத்தை நினைச்சுப்பாக்க எவ்வளவோ சந்தோசமாகக் கிடக்குது. ஏன்தெரியுமே? அண்டைக்கு நான் அந்தப்பொடியளோடை சேந்து விளையாடி, அவங்கடை பழக்கவழக்கங்களைப் பழகியிருந்தால், இப்ப இந்தவயசிலும் தண்ணியடிக்கிறவனாக... பீடி, சிகரெட்... குடிக்கிறவனாக... களவெடுக்கிறவனாக... மறியலுக்குப்போய் வந்தவனாக மாறியிருப்பன். அந்த நேரம் அந்தச் சின்னப்பொடியள் என்னை ஒதுக்கித் தள்ளினது பிற்காலத்துக்கு எவ்வளவோ நல்லதாப்போச்சுப் பாத்தியளே!

இதேமாதிரித்தான் இளந்தாரி வயசிலும் சில பிரச்சினையள் தலைக்கு வந்துதலைப்பாகையோடை போன மாதிரிப் போயிட்டுது. இப்ப வயசுபோன காலத்திலும் என்ர வயசிலும் பாக்க வயசு குறைஞ்சதுகள் என்னோடை அன்பாக மரியாதையாகப் பழகியிட்டு, சில அற்ப விசயங்களுக்காக படாரெண்டு முகத்தை முறிச்சுப் போட்டு இருக்குதுகள். இது எனக்கு மனசுக்கு வேதனையாக இருந்தாலும், இவையளால எனக்கு பின்னான காலத்தில ஏதோ பிரச்சினைக்கு இடமிருக்கிறதாலதான், எனக்குரிய இன்றைய நிகழ்காலம் இப்பிடி நடப்பித்துக்காட்டுதென்று நான் நம்புறன் இதை விட, என்ர அம்மாச்சி சொல்லுறவ “எதுவும் கிட்டாததாயின் வெட்டெடன மற...” எண்டு.

**- சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# ஒவ்வொரு நோயாளிகளின் உயிரும் மருத்துவர்களுக்கு முக்கியமானது

## காசநோய் வைத்திய நிபுணர் சி. யமுனானந்தா



நோயாளிகள் ஒவ்வொருவரினது உயிரும் மருத்துவர்களுக்கு முக்கியமானது என யாழ் மாவட்ட காசநோய் வைத்திய நிபுணர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக தினமுரசு செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற சம்பவங்கள் மிகவும் வேதனைக்குரியதாக இருக்கின்றது.

மருத்துவர்கள் மக்களுக்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் திகழ வேண்டியவர்கள். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றார்கள். இதனால் போராட்டம் நடைபெறுகின்றன. இதனால் நோயாளிகளே பாதிக்கப்படுகின்றார்கள்.

தேன்கூட்டிற்கு கல் எறிந்தது போல புற்றுநோய் வைத்தியர் டாக்டர் ஜெயக்குமார் வீட்டில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவை சமூக பிறழ்வுகளுக்கு காரணமாக அமையும்.

எரியும் நெருப்பிற்கு எண்ணை ஊற்றுவது போல சில ஊடகங்கள் இந்த முரண்பாட்டை வன்முறை நோக்கி செல்ல ஏதுவாக செய்தி வெளியிட்டுள்ளன. அவை சமூக அக்கறை அற்று வர்த்தக நோக்குடன் செயற்படுகின்றன.

சட்டத்தரணிகள், மருத்துவர்கள் இடையே பிளவு ஏற்படும் போது தமிழ் குலம் அழிந்து போகும் நிலை ஏற்படும். அதனால் சமூகத்தில் உள்ள புத்தி ஜீவீகள், சட்டத்தரணிகள், ஊடகங்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

நான் அரச மருத்துவ சங்கத்திலோ, தொழிற்சங்கத்திலோ அங்கத்தவராக இல்லை. ஆனாலும், வேடிக்கை பார்ப்பவர் மத்தியில் மிக அவதானமாக செயறபட வேண்டும். பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் நோயாளிகளே ஆகும். பணம் உள்ளவர்கள் வெளியில் காணப்படும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவார்கள். ஆனால் பணம் இல்லாதவர்கள் படும் துன்பம் யாருக்குப் புரியும்?

வைத்தியசாலையில் முன்னேற்றத்தைத் தடுக்கும் சில சக்திகள் இவ்வாறான செயற்பாடுகளைச் செய்கின்றன.

யுத்த காலத்தின் பின்னர் சமூக காழ்ப்புணர்வுகள் ஒவ்வொரு நிர்வாக மட்டத்திலும் பிரதிபலிக்கின்றன.

ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வாறு வரும்போது சமூக ரீதியில் உளவள ஆலோசனை தேவை. நேர்மை, நம்பிக்கை, கடின உழைப்பு இருக்க வேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சம்பவங்கள் தொடர்பான தீர்க்கமான முடிவுகள் கிடைக்க வேண்டும். பாரபட்சமின்றி உடனடியாக நீதி கிடைக்க வேண்டும். காலம் தாழ்த்திய நீதி அநீதிக்கு சமமானது. டாக்டர் ஜெயக்குமார் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள், வைத்தியசாலையில் முரண்பாட்டை ஏற்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்றார். (எஸ்)

# அபராதங்கள்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக அரச சாராயம் விற்பனை செய்தவர்கள் மற்றும் 21 வயதுக் குட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தவர்களுக்கு 73 ஆயிரத்து 500 ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ். மதுவரித் திணைக்களத்தினால் யாழ்.நகர் மற்றும் ஆஸ்பத்திரி வீதி, கொக்குவில் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது குறித்த 17 வர்த்தகர்களும், 1 மது விற்பனை நிலையத்தினரும் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா, 11 வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதமும், 4 வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும், 1 வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபாவும், மற்றொருவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபானம் விற்பனை செய்தவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாக செலுத்துமாறு கடுமையாக எச்சரிக்கை விடுத்தார். (எஸ்)

# பயணிகளை ஏமாற்றும் ஆசனப் பதிவாளர்கள்

கொழும்பு - யாழ்.போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் ஒரு சில தனியார் பேருந்து ஆசனப் பதிவாளர்களும், நடத்துநர்களும் கொழும்புப் பயணிகளை ஏமாற்றி வருவதாக பயணிகள் விசனமும், கவலையும் தெரிவித்து வருகின்றனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் கூவி அழைத்து ஆசனப் பதிவுகளை மேற்கொண்டு பயணிகளை ஏற்றிக் கொண்டு வரும் ஒருசில தனியார் பேருந்துகள் ஆசனப்பதிவு மேற்கொள்ளும் போது கூறியவாறு பய்யணிகளை உரிய இடத்தில் இறக்கிவிடாது, தாங்கள் நினைத்த இடத்தில் நிறுத்தி விட்டு பயணிகளைக் கட்டாயப்படுத்தி இறக்கிவிடும் சம்பவங்கள் அண்மையில அதிகரித்து வருகின்றன.

கடந்த 8 ஆம் திகதி வெள்ளவத்தையிலுள்ள தனியார் பேருந்து ஆசனப் பதிவகத்தில் பதிவுகளை மேற்கொண்ட சுன்னாகம், மருதனார் மடம், கோணடாவில், இணுவில், கொக்குவில், தாவடிப் பகுதியில் இறங்க வேண்டிய 15 இற்கும் மேற்பட்ட பயணிகளை யாழ்.பஸ் நிலையத்தில் இறக்கி விட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

'லக்சுமி' போக்குவரத்துச் சேவை என்ற விளம்பரத்துடன் இரு பேருந்துகள் கொழும்பு - யாழ்.சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் பேருந்துகளில் ஒன்று கொழும்பு - பருத்தித்துறைச் சேவையிலும், மற்றது கொழும்பு - காங்கேசன்துறைச் சேவையிலும் ஈடுபட்டு வருகிறன. இந்தப் பேருந்துக்குரியவர்களே இந்த பயணிகளை ஏமாற்றும் பேர் வழிகளாக இருந்து வருகின்றனர்.

இவர்களது பேருந்துகளில் ஒன்று கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு கே.கே.எஸ். வழியாக (விளம்பரப் பலகையில் இவ்வாறு உள்ளது) செல்கிறது.

ஆசனப்பதிவு செய்பவர்கள் தாங்கள் சுன்னாகம், தெல்லிப்பழை, மருதனார் மடம், கோண்டாவில், இணுவில், கொக்குவில் செல்ல வேண்டி இருப்பதைக் கூறும்போது, அந்த வழியில் தான் செல்வதாகக் கூறி ஏற்றி விட்டு யாழ்.நகரில் கொண்டு வந்து இறக்கி விடுகின்றனர்.

இது பற்றிப் பயணிகள் நடத்துநரிடம் நியாயம் கேட்டபோது பதிவு செய்த இடத்தில் கதையுங்கள் எனத் தெரிவிக்கின்றார். அதுமட்டுமன்றி பதிவு செய்யப்பட்ட ஆசனங்களையும் வழங்காது வேறு ஆசனங்களை வழங்கிப் பயணிகளிற்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

இடைவழியில் பேருந்தை நிறுத்தி சிலரை தங்களது அடுத்த பேருந்தில் ஏற்றுகின்றனர். இவ்வாறு பயணிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாகவும், ஆசனப்பதிவு விதிகளை மீறியும் செயல்படும் குறிப்பிட்ட பேருந்து நடத்துநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்கப்படுகின்றது. (06)

# கொழும்பில் நில அதிர்வு; செய்தியில் உண்மையில்லை

(கொழும்பு)

கொழும்பின் சில புகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டதாக வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் விஸ்தரிப்பு பணிகளுக்காக நிலத்தின் கீழ் பாறைகள் உடைக்கப்படுவதன் காரணமாக இத்தகைய அதிர்வுகள் உணரப்பட்டிருக்கலாம் என நம்புவதாக பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அனில் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிகள் தொடர்பாக துறைமுக அதிகாரிகள் ஏற்கனவே தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் விஸ்தரிப்பு பணிகளுக்காக நிலத்தின் கீழ் உள்ள கற்பாறைகளை உடைக்கும் போது உரிய தரத்துடன் அந்த நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# மன்னாரில் மீள் குடியேறியோர் பயிர்ச் செய்கையை கைவிடும் நிலை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த மரக்கறிப் பயிர்ச் செய்கையை கை விட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் மரக்கறி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கோவா, கத்தரி, பயிற்றை, கறிமிளகாய், தக்காளிப்பழம், கீரை, மிளகாய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் போன்றவை பயிரிடப்பட்டு வருகின்றன.

யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து மீண்டும் தமது சொந்த கிராமங்களுக்குத் திரும்பிய மக்கள் தமது கிராமங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது விளைச்சல் அதிகமாக கிடைத்தன. அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற அமைபபுக்களினாலும் விதைகள் வழங்கப்பட்டதோடு பயிர் செய்கையை மேற்கொள்வதற்கு சகல விதமான வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

மீள்குடியேற்ற கிராமங்களில் அடிப்படை வசதியற்ற நிலையில் வாழ்ந்து வரும் இம் மக்கள் தற்போது அவர்கள் மேற்கொண்டு வரும் மரக்கறி வகை உற்பத்தியை பலப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

உரிய உரம் இன்மை, பயிர்ச் செய்கைக்கான நீர்த் தட்டுப்பாடு கட்டாக் காலிகளின் தொல்லை போன்றவற்றினால் தமது பயிர்ச் செய்கையை கை விட வேண்டிய நிலையில் உள்ளதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மின் கம்பிகளில் உப்பு படிவதால் மின்தடை ஏற்படுகின்றது

(மதவாச்சி)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் உள்ள அதியுயர் மின் கம்பங்களில் உள்ள மின் கம்பிகளில் உப்புக்காற்று படிவதன் காரணத்தினாலேயே திடீர், திடீர் என மன்னார் மாவட்டத்தில் மின்சாரம் தடைப்படுவதாக மன்னார் மின்னார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது கடுமையான காற்று வீசி வருகின்றது. இதன் காரணமாக மன்னார் - மதவாச்சி பிராதான வீதி மற்றும் மன்னார் பிரதான பாலத்தடி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அதியுயர் மின் கம்பங்களில் உள்ள மின் கம்பிகளில் கடலில் உள்ள உவர்ப்பு நீருடன கூடிய காற்றுப் பட்டு குறித்த கம்பிகளில் உப்பாக படிகின்றது.

இதன் காரணமாக வயர்களில் உரசல்கள் காணப்பட்டு வெடித்து மின்தடை ஏற்படுகின்றது. குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் முகமாக அதியுயர் கருவிகள் மூலம் குறித்த மின் கம்பிகளை சுத்தம் செய்யும் பணியில் தற்போது மன்னார் மின்சார சபை ஈடுபட்டு வருவதாக மன்னார் மின்சார சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# குடாநாட்டில் 340 பேர் வீட்டுக்கடன் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டு கடன் திட்டத்தில் 340 வீடுகள் நிர்மாணிப்பதற்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் றோயஸ் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிராமத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்கள் இவ் வீட்டுக்கடன் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இதில் முதற்கட்டமாக 23.3 மில்லியன் ரூபா நிதியில் 28 புதிய வீடுகள் த்ரமுயர்த்துவதற்கும், இரண்டாம் கட்டமாக 7.4 மில்லியன் ரூபா நிதியில் 37 புதிய வீடுகளும், மூன்றாம் கட்டமாக 10.5 மில்லியன் ரூபாவில் 95 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளது. 95 வீடுகளில் 10 வீடுகள் புதிய வீடுகளும், 85 தரமுயர்த்தப்படவும் உள்ளன.

அதில் விசேடமாக சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 7 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், 46 வீடுகள் தரமுயர்த்தப்படவுள்ளன. இவ் விசேட வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கி வைக்கவுள்ளார் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார். (எஸ்)

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

| 02 | T | II |
|---|---|---|

நேரம் : 2 மணித்தியாலம்


உயிரியல் - (பகுதி II)
Biology -(Part - II)

# கல்வி முரசு

ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

உயிரியல் - பகுதி II தொடர்ச்சி...........

(02) A) 1) புவியின் காலநிலைப் பிரதேசங்களின் பரம்பல் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




குறியீடுகளைப் பயன்படுத்தி பின்வரும் உயிரியல் கூட்டங்களை (Biomes) சுட்டிக்காட்டுக.அவற்றிற்குரிய தனித்துவமான தாவரங்களையும் குறிப்பிடுக.

| | பரம்பல் | தனித்துவமான தாவரம் |
|---|---|---|
| 1. பாலைவனம் | ........................ | ........................ |
| 2. இடைவெப்ப புல்நிலம் | ........................ | ........................ |
| 3. தைகா (Taiga) | ........................ | ........................ |
| 4. பரட்டைக்காடு (Chapparal) | ........................ | ........................ |
| 5. தண்டிரா(Tundra) | ........................ | ........................ |

2) புல்நிலம் ஒன்றின் உற்பத்தித் திறனைப் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a) சூழற் தொகுதியில் படுகின்ற சூரியசக்தி $4.65 \times 10^8$

b) மொத்த முதலுற்பத்தி $4.83 \times 10^6$

c) தேறிய முதலுற்பத்தி $4.95 \times 10^4$

i. படுகின்ற சூரிய ஒளியின் எத்தனை சதவீதமானது குளோரோபில்லினால் உறிஞ்சப்பட்டு சேதன மூலக்கூறுகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது?
........................................................................
........................................................................

ii. a. உயிர்த்திணிவாக சேமிக்கப்படுவது எத்தனை சதவீதம்?
........................................................................

b. தேறிய உற்பத்தி, மொத்த உற்பத்தியை விட குறைவாக இருப்பதன் காரணம் யாது?
........................................................................
........................................................................

iii. சூழல் தொகுதி ஒன்றில் ஒரு போசணை மட்டத்திலிருந்து அடுத்த மட்டத்துக்கு செல்லும் போது கிடைக்கக்கூடிய சக்தியின் அளவில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதற்கான காரணம் யாது?
........................................................................
........................................................................

iv. சமுதாயம் ஒன்றானது இயங்குநிலைக்கு வரவேண்டுமாயின் அதில் காணப்படவேண்டிய இரண்டு செயன்முறைகள் தருக.
a. ........................... b. ...........................

B) 1) பின்வரும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஓமோன்கள் எவை?
a) பழம் பழுத்தலைத் தூண்டல் ........................
b) கலப் பிரிவைத் தூண்டுதல் ........................
c) அங்குரத்தின் விரைவான நீட்சி........................

2) நெல் வயல்களில் களைகொல்லியாக பயன்படுத்தப்படும் செயற்கை ஓமோனின் இரசாயனப் பெயரைத் தருக.
........................................................................
........................................................................
........................................................................

3) கன்னிக் கனியமாதலை எவ்வாறு செயற்கையாகத் தூண்டலாம்.
........................................................................
........................................................................
........................................................................
........................................................................


C) 1) $C_3$, $C_4$ தாவரங்கள் ஒளித்தொகுப்பு தொடர்பான பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| | $C_3$ தாவரம் | $C_4$ தாவரம் |
|---|---|---|
| a) முதல் உறுதியான விளைவு | ................ | ................ |
| b) முதலாவது $CO_2$ பதித்தல் | ................ | ................ |
| c) $CO_2$ வாங்கி மூலக்கூறு | ................ | ................ |
| d) $CO_2$ பதித்தலுக்குத் தேவையான நொதியம் | ................ | ................ |
| e) உற்பத்தித்திறன் | ................ | ................ |

2) தாவரத்தின் வளர்ச்சி என்பதால் விளங்கிக் கொள்வது யாது?
........................................................................
........................................................................

3) தாவரத்தின் நீளவளர்ச்சியை அளவிடும் உபகரணம் யாது?
........................................................................
........................................................................
........................................................................

4) கீழே தரப்பட்ட இடைவெளியில் ஆண்டுத்தாவரம் ஒன்றின் நாற்று நிலையிலிருந்து இறப்பு வரையான வளர்ச்சிவீதத்தைக் காட்ட நேரத்துக்கு எதிராக வரைபொன்றை வரைக.



5) தாவரங்களில் வளர்ச்சியை ஏற்படுத்தும் கலமட்டத்திலுள்ள மூன்று செயன்முறைகள் யாவை?
........................................................................
........................................................................
........................................................................
........................................................................


6) புன்வெற்றிட கலமொன்று தொடர்பாக பின்வரும் பதங்களை விளக்குக.
1. கரைய அழுத்தம்
........................................................................
........................................................................
2. அமுக்க அழுத்தம்
........................................................................
........................................................................

பின்வரும் செயற்பாடுகளை அளவிட பயன்படுத்தும் உபகரணங்களைத் தருக.

3. தாவரங்களின் ஆவியுயிர்ப்பு வீதம்
........................................................................

4. நீர்த்தாவரத்தில் ஒளித்தொகுப்பு
........................................................................

3) A) பெண்ணொருவரின் மாதவிடாய் வட்டத்தின் போது குருதியில் ஓமோனின் மட்டங்கள் கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) a) ஓமோன்கள் P, Q வை இனங்காண்க.
P ........................ Q ........................

b) பொருத்தமான விருத்தியடைந்த சூலகப்புடைப்பின் மீது P இன் சடுதியான அதிகரிப்பு எவ்விளைவை ஏற்படுத்தும்?
........................................................................
........................................................................

c) 14 - 21 நாட்களுக்கு இடைப்பட்ட காலத்தில் P, Q ஓமோன்களின் மட்டங்களுக்கு இடையிலுள்ள இடைத்தொடர்பை விளக்குக.
........................................................................
........................................................................

2) வெளியேற்றப்பட்ட சூலை கடத்துவதில் பலோப்பியன் குழாய்களின் கட்டமைப்பு எவ்வாறு உதவுகின்றது?
........................................................................
........................................................................

(மறுபக்கம் பார்க்க)

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (A/L) Examination model Paper
# கல்வி முரசு

உயிரியல் - (பகுதி II)
Biology -(Part - II)

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

ஆசிரியர் : Ponniah Aravinthan (B.se, M.ed, Dip.in.ed)

3) புதிதாக வெளியேற்றப்பட்ட விந்து முதல் சில மணித்தியாலங்களுக்கு கருக்கட்டும் ஆற்றலைக் கொண்டிராததற்கான காரணம் என்ன?

.............................................................................

.............................................................................

4) a) கர்ப்பத்திலுள்ள சிசுவைப் பாதிக்கும் நிறமூர்த்த எண்ணிக்கை தொடர்பான நிறமூர்த்த அசாதாரண நிலைகள் இரண்டு தருக.

.............................................................................

.............................................................................

b) மேற்கூறப்பட்ட விகாரம் ஏற்படுவதற்கான காரணம் யாது?

.............................................................................


.............................................................................

5) நிறமூர்த்த அசாதாரண நிலை பற்றி பிரசவத்திற்கு முன்னர் எவ்வாறு கண்டறியப்படுகின்றது?

.............................................................................

.............................................................................

B) மனித சூல் வித்தகத்தின் அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.



1) a, b, c, d, e ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

a ................................ d ................................

b ................................ e ................................

c ................................

2) எக்குருதிக் கலன்

i) சிசுவிற்கு ஒட்சிசனையும், போசணையையும் கொண்டு செல்கின்றது?

.............................................................................

.............................................................................

ii) சிசுவிலிருந்து காபனீரொட்சைட்டையும் யூரியாவையும் வெளியே கொண்டு செல்கின்றது?

.............................................................................

.............................................................................

3) சூல்வித்தகத்தின் ஆக்கத்தில் பங்குகொள்ளும் முளைய மென்சவ்வுகள் எவை?

.............................................................................

.............................................................................

4) கருத்தரித்த காலத்தில் மனித சூல்வித்தகத்தால் சுரக்கப்படும் ஓமோன்களைத் தந்து அவற்றின் பிரதான தொழில் ஒன்றையும் தருக.

| ஓமோன் | தொழில் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

C) 1) குழந்தை பிறந்தவுடன் அதிக மாற்றத்திற்குள்ளாகும் அங்கத் தொகுதி யாது?

.............................................................................

2) பிறப்பின் போது குழந்தையின் நுரையீரல்கள் விரிவதற்கு உதவும் இரசாயனப் பொருளிற்கு எப்பெயர் வழங்கப்படுகின்றது?

.............................................................................

3) மனிதனில் சுவாசமையம் எங்கு அமைந்துள்ளது?

.............................................................................

4) மனித சுவாசத் தொகுதியின் மூன்று தொழில்களைத் தருக.

.............................................................................

.............................................................................

.............................................................................

D) 1) a) மனிதனின் குருங்கல் அமுக்கம் என்பதிலிருந்து விளங்கிக் கொள்ளப்படுவது யாது?

.............................................................................

.............................................................................

b) ஆரோக்கியமான ஒருவரின் சாதாரண சுருங்கல் அமுக்கம் யாது?

.............................................................................

2) நாடிக்குருதி அமுக்கத்தை சாதாரண மட்டத்தினுள் பேணுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் மூன்று தருக.

.............................................................................

.............................................................................

.............................................................................

3) இதயத் துடிப்பு வீதம், வலிமை என்பவற்றை அதிகரிக்கச் செய்யும் இரு ஓமோன்களைப் பெயரிடுக.

.............................................................................

.............................................................................

4) இதயத் துடிப்பு நிரோதிக்கும் மையங்களைத் தூண்டும் செய்திகளை அனுப்பும் அமுக்கவாங்கிகள் அமைந்திருக்கும் இடத்தைத் தருக.

.............................................................................

.............................................................................

5) மாற்றுப் பாதை சத்திரசிகிச்சை மூலம் எக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படுகின்றது?

.............................................................................

.............................................................................

.............................................................................

4) A) 1) உணவை நற்காப்பு செய்ய வேண்டியதற்கான காரணங்கள் இரண்டு தருக.

a) .............................................................................

b) .............................................................................

2) உணவை நற்காப்புச் செய்யும் முறைகள் தொடர்பான அடிப்படைத் தத்துவங்கள் மூன்று தருக.

a) .............................................................................

b) .............................................................................

c) .............................................................................

3) பின்வரும் உணவு நற்காப்பு தொடர்பான அடிப்படைத் தத்துவங்கள் யாவை?

a) மீன்களைத் தகரத்திலடைத்தல் ................................

b) கட்டிப்பால் தயாரித்தல் ................................

c) பாய்சரேற்றம் செய்யப்பட்ட பால்................................

4) தரப்பட்ட விருந்து வழங்கியின் எதிர்ப்பு பொறிமுறையுடன் தொடர்பான எழுத்துக்களை அவற்றுக்கு முன் குறிப்பிடுக.

A - உயிர்ப்பான செயற்கை

B - உயிர்ப்பற்ற இயற்கை

C - உயிர்ப்பான இயற்கை

D - உயிர்ப்பற்ற செயற்கை

E - இரசாயனத் தடை

F - தனித்துவமற்ற

i) - Tetanus தடைமருந்து (ஈர்ப்பு வலி)

ii) - கடும்புப் பால்

iii) - உடற்பாயத்துடனான நிரப்பீடணம்

iv) - இரைப்பையிலுள்ள Hel

v) - கண்ணீரிலுள்ள இலைசோசோம்

vi) - நடுநிலை நாடிகளின் தொழிற்பாடு

vii) - உடல் வீக்கங்கள் தோன்றுதல்

viii) - Interferon

ix) - வாதனாளியிலுள்ள பிசிர்கள்

B) பின்வரும் ஒட்டுண்ணிகளின் தொற்றுப் பருவங்களையும், மனிதவிருந்து வழங்கிக்கு எவ்வாறு கடத்தப்படுகின்றன எனவும் எழுதுக.

| | தொற்றும் பருவம் | கடத்தப்படும் முறை |
|---|---|---|
| 1. Ascaris | ................................ | ................................ |
| 2. Necator | ................................ | ................................ |
| 3. Entamoeba | ................................ | ................................ |
| 4. Wuchereria | ................................ | ................................ |

C) ஓரின வளர்ப்பை விட பல்லின வளர்ப்பிலுள்ள இரண்டு அனுகூலங்கள் தருக.

.............................................................................

.............................................................................

.............................................................................

(தொடரும்)

# அப்துல் கலாமை நிறுத்துங்கள்; நிறுத்தாது விட்டால் முடிவு விபரீதம்




ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தேர்வில் தங்களது முதல் விருப்பம் கலாம்தான். அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனில், தனது வழியில் செல்லப்போவதாக மம்தா பானர்ஜி மிரட்டல் விடுத்துள்ளார். ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு, காங்கிரஸ் கட்சிக்கு முன்பு இது வரை இல்லாத தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

மம்தா பானர்ஜி. காங்கிரஸ் தலைவர் சோனியாவின் அழைப்பின் பேரில் டில்லி சென்ற அவர், தனது புதிய தோழரான சமஜ்வாடி கட்சியின் முலாயம் சிங்கை சந்தித்து பேசினார். பின்னர், காங்கிரஸ் தலைவர் சோனியாவை சந்தித்த பின் நிருபர்களிடம் பேசிய மம்தா, பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில், காங்கிரஸ் கட்சியின் முதல் விருப்பமாக உள்ளார் என்றும், இரண்டாவது விருப்பமாக ஹமீத் அன்சாரி உள்ளார் என்றும் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அதிகாரப்பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படாத நிலையில், மம்தா இது போன்று பேசியது காங்கிரஸ் கட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பின் இருவரும் கூட்டாக, அப்துல் கலாம், மன்மோகன் சிங் மற்றும் சோம்நாத் சட்டர்ஜி ஆகிய மூன்று பேரின் பெயர்களை அறிவித்தனர். இதுகுறித்து இன்று கருத்து தெரிவித்த காங்கிரஸ் கட்சி, வரும் 2014ஆம் ஆண்டு வரை, மன்மோகன் சிங்கே பிரதமராக தொடர்வார் என்றும், அப்துல் கலாம் மற்றும் சோம்நாத் சட்டர்ஜிக்கு தங்கள் ஆதரவு இல்லை என்றும் பதிலடி கொடுத்தது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியின் கருத்தால் அதிருப்தியடைந்த மம்தா, அப்துல் கலாமே தங்களது ஜனாதிபதி வேட்பாளர் விருப்பம் என்று உறுதியாக தெரிவித்துள்ளார். அவ்வாறு அவர் தேர்வு செய்யப்படாத பட்சத்தில் தங்கள் வழியில் செல்லவுள்ளதாகவும் மம்தா கூறியுள்ளார். தாங்கள் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் நீடிக்க விரும்புகிறோம். கூட்டணியிலிருந்து விலகவோ அல்லது ஆட்சியை கவிழ்க்கவோ விருப்பமில்லை. எனினும் தாங்கள் கூட்டணியில் இருப்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை ஐக்கிய முற்போக்கு கூட்டணியிடமே விட்டுவிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# திருமண வீட்டில் ஜெயலலிதா



(சென்னை)

பலனைப் பற்றிக் கவலைப் படாமல் செயலில் இறங்கினால், மகத்தான சாதனைகள் நிகழ்த்த, இறையருள் பக்க பலமாக இருக்கும் என ஜெயலலிதா தெரிவித்துள்ளார். கட்சி உறுப்பினர்களது இல்லத் திருமணங்களை, நடத்தி வைத்து உரையாற்றும் போதே ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் திருமணம் என்பது இரண்டு உயிர்கள் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு, வாழ்க்கையை ஆனந்தமயமாக்குகின்ற அழகிய நிகழ்வு. பெற்றோரைப் பிரிந்து புதிய வாழ்வில் அடியெடுத்து வைக்கும் மணமகளை, கண்ணின் இமைபோல் காக்க வேண்டியது மணமகனின் கடமை. கணவனுக்குச் சிக்கல் வரும் போது விடையாகவும், விக்கல் வரும்போது நீராகவும் மனைவி இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்

# மதுரை இளைய ஆதீனம் நித்தியானந்தா தான் முடிவில் மாற்றமில்லை என்கிறார் அருணகிரிநாதர்

மதுரை இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்ட நித்யானந்தாவை, அப்பதவியில் இருந்து நீக்கும் எண்ணம் எதுவும் இல்லை என்று மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் தெரிவித்துள்ளார். மதுரை ஆதீனத்தின் இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்ட நித்யானந்தாவை உடனடியாக பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பலதரப்பினரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நித்யானந்தா தன் மீதான வழக்குகளை சட்டப்பூர்வமாக சந்தித்து, நிரபராதி என்று நீதிமன்றத்தில் நிரூபிப்பார். சைவ வேளாளரான நித்யானந்தா, மதுரை இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டது



திடீர் முடிவு என்றாலும், இந்த முடிவை சிவபெருமான் தான் எனக்கு உணர்த்தினார். பல கோடி மதிப்பிலான சொத்துக்களை கொண்ட மதுரை ஆதீன மடத்தை நிர்வாகம் செய்யும் திறமை நித்யானந்தாவிற்கு மட்டுமே உள்ளது என்று இறைவன் எனக்கு உணர்த்தினார். இறைவன் கொடுத்த கட்டளையின் பேரில் தான் நித்யானந்தா 293ஆவது இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுரை இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டுள்ள நித்யானந்தா, கைது செய்யப்பட்டதால் அவரது பதவியில் இருந்து மாற்றும் எண்ணம் எதுவும் இல்லை. கைது செய்யப்பட்டதால் அவரை குற்றவாளி என்றும் கூற முடியாது. மதுரை இளைய ஆதீனம் நியமனத்தில் இருந்து நான் பின்வாங்க மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை நித்தியானந்தாவின் பிடதி ஆசிரமத்தில் சோதனை நடத்திய அதிகாரிகளும் பொலிஸாரும் அங்குள்ள அறை ஒன்றில் அடைத்து வைத்திருந்த 50 சிறுவர், சிறுமியரை மீட்டுள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட சிறுவர், சிறுமியர் 8 முதல் 15 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# பழம்பெரும் நடிகர் காகா ராதாகிருஷ்ணன் மரணம்



நடிகர் திலகம் சிவாஜி கணேசனை திரையுலகிற்கு அறிமுகம் செய்து வைத்த பெருமைக்குரிய பழம்பெரும் நடிகர் காகா ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார். இவருக்கு கடந்த சில மாதங்களாக மூச்சுத்திணறல் இருந்தது. அதற்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த வாரம் ஓரளவு குணம் அடைந்து வீடு திரும்பினார். இருப்பினும் நேற்றுமுன்தினம் மீண்டும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மாலை 3-30 மணிக்கு மரணம் அடைந்தார்.

காகா ராதாகிருஷ்ணன் என்றழைக்கப்படும் ராதாகிருஷ்ணன் 6 வயதில் இருந்து நாடகத்தில் நடித்தவர். நடிகர் என்.எஸ். கிருஷ்ணன் நாடகக்குழுவில் நீண்ட காலம் நடித்தார். மங்கையர்க்கரசி என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். அந்தப் படத்தில் நடித்தபோது ஒருமரத்தில் ஏறி காக்கா பிடித்தவாறு நடித்திருந்தார். அதில் இருந்து அவர் காகா ராதாகிருஷ்ணன் என்று அழைக்கப்பட்டார். இதுவரை 600 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

சிவாஜியுடன் நடித்த மனோகரா, கமலுடன் நடித்த குணா, தேவர்மகன், வசூல்ராஜா எம்.பி.பி.எஸ், அஜீத்துடன் நடித்த உன்னைத்தேடி, விஜய்யுடன் நடித்த காதலுக்கு மரியாதை ஆகியவை அவர் நடித்த படங்களில் குறிப்பிடத்தகுந்தவை. மாயி படத்தில் அவரும் வடிவேலுவும் நடித்த காமெடி காட்சிகள் மிகவும் பேசப்பட்டவை.

# பிளாஸ்டிக் கழிவுகளுக்கு தங்கநாணயம் கொடுக்கும் தமிழகம்



பிளாஸ்டிக் தார்ச் சாலை திட்டம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 100 கிராமிற்கு மேல் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு வரும் பொதுமக்களுக்கு குலுக்கல் முறையில் தங்கம், வெள்ளி நாணயங்கள் பரிசாக வழங்கப்படும் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் சென்னை பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் சங்கத்தினர் சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். மேலும் தமிழக அரசு தொலை நோக்குத் திட்டத்துடன் உருவாக்கியுள்ள திட்டம் பிளாஸ்டிக் தார்ச் சாலை திட்டம். இத்திட்டத்தால் பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதுடன் தரமான சாலைகளும் கிடைக்கும். இத்திட்டம் வெற்றி பெற அரசு, தொழில் முனைவோர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்பு அவசியம் தேவை அதற்காகவே பரிசுத்திட்டம் அறிவித்து மக்களை ஈடுபடச் செய்யவுள்ளதாக தெரிவித்தனர்.

# ரஞ்சிதாவின் சுயசரிதை வெளிவரவுள்ளது

(பெங்களூரு)

நித்யானந்தா சம்பந்தமான, "சிடி"யை உருவாக்கியது எனக்கு மிகவும் மன வேதனை அளித்துள்ளது. நீதி கேட்டு தனி ஆளாக நீதிமன்றம் ஏறி இறங்கியுள்ளேன். நீதிமன்றத்தின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது என நடிகை ரஞ்சிதா தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், நித்யானந்தா தியான பீடம் குறித்து கட்டுக்கதைகள் உருவாக்கப்படுகின்றன. சுவாமியை தனிப்பட்ட முறையில் ஒழித்துக் கட்ட சூழ்ச்சி நடந்துள்ளது. நித்யானந்தாவுடன் என்னை இணைத்துக் கூறிய அனைத்தும் கற்பனைக் கதைகள். வெறும் யூகத்தில் பல புகார்களை உருவாக்கி, என் கௌரவத்துக்கு பங்கம் விளைவித்தனர். எப்படியும் இன்று அல்லது நாளை உண்மை வெளி வரும். என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள், எதிர்கொண்ட பிரச்சினைகள் குறித்து சுயசரிதை எழுதவுள்ளேன் என்றார்.




ஆனால், ரஞ்சிதாவின் வாதத்தை மறுத்துள்ள நித்யானந்தா முன்னாள் கார்ச்சாரதி லெனின், வெளியான, "சிடி"யில் இருப்பது நூற்றுக்கு நூறு உண்மை என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்ததார்.



வத்திராயிருப்பு - ஆகாசம்பட்டியில் ஒரே கிளையில் 32 மாங்காய்கள் காய்த்திருக்கிறது.

# எகிப்தில் நாடாளுமன்றம் கலைப்பு



எகிப்தில் 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தியதால், அவர் ஆட்சியிலிருந்து விலகினார். இதையடுத்து கடந்தாண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் இந்தாண்டு ஜனவரி மாதங்களில் 508 இடங்களுக்கான நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. இந்நிலையில் தற்போது ஜனாதிபதி தேர்தலும் நடந்துள்ளது.

இந்தத் தேர்தல்களில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், மறுதேர்தல் நடைபெற உள்ளது. முபாரக் ஆட்சியில் பிரதமராக இருந்தவர், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. ஆனால் அவர் தற்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதற்கிடையே நாடாளுமன்றத் தேர்தல் விகிதாசார முறைப்படி நடக்காததால், இது அரசியலமைப்புக்கு முரணானது என கூறிய எகிப்து உச்சநீதிமன்றம் நாடாளுமன்ற தேர்தல் செல்லாது. எனவே நாடாளுமன்றம் கலைக்கப்படுகிறது என நேற்று முன்தினம் தனது தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளது.

# கொலை செய்த பின் துறவியானார் துறவிக்கு மரண தண்டனை

இரண்டு கொலைகளைச் செய்து விட்டு புத்த துறவியாக வாழ்ந்த வந்த நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் உள்ளது ஜியுஜியாங். இந்தப் பகுதியை சேர்ந்தவர் சியு சின்லியான்(வயது-39). கடந்த 1994ஆம் ஆண்டு ரயில் நிலைய ஓய்வறையில் ஏற்பட்ட தகராறில் சின்லியான், கணவன்- மனைவியை கொலை செய்தார். அவர்களது இரண்டு வயது குழந்தையையும் தாக்கியதில் அந்த குழந்தை காயமடைந்தது.

இந்தச்சம்பவம் தொடர்பாக சின்லியான் மற்றும் ஐந்து பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த கொலைச் சம்பவத்துக்குப் பிறகு தலைமறைவான சின்லியான், ஷிஜியாங் மாகாணத்தில் உள்ள ஹாங் ஷா நகரில் உள்ள புத்தமடாலயத்தில் புத்த துறவியாக இருந்தார். கடந்தாண்டு நவம்பர் மாதம் தான் இவர் இந்த மடாயலத்தில் தங்கியிருந்தது தெரிய வந்தது. இதையடுத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இரண்டு கொலைகளை செய்த குற்றத்துக்காக இவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை அறிவித்துள்ளது. இவர் மீது மற்ற குற்றவியல் புகார்கள் ஏதும் இல்லாத காரணத்தால், இரண்டு ஆண்டு கழித்து மரண தண்டனையை நிறைவேற்ற நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பிரிட்டன் புலனாய்வுத்துறைக்கு இப்படியும் ஒரு சலுகை

உண்மையைக் கண்டறிவதற்காக குற்றவாளிகளுடன் காதல் மட்டுமல்ல, பாலியல் ரீதியான தொடர்பு வைத்து கொள்ள கூட பொலிஸாருக்கு அனுமதி உண்டு என இங்கிலாந்து உள்துறை இணை அமைச்சர் நிக் ஹெர்பர்ட் கூறியுள்ளார். இதுகுறித்து அமைச்சர் நிக் ஹெர்பர்ட் கூறுகையில், விசாரணைக்கு தேவை என்று கருதும் பட்சத்தில் குற்றவாளிகள் என்று சந்தேகப்படுபவர்கள் அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களுடன் பாலியல் ரீதியிலான உறவு வைத்துக் கொள்ள இரகசியப் பொலிஸாருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது என்றார். விசாரணைக்கான சிறப்பு அதிகாரங்கள் ஒழுங்குமுறை சட்டம் 2000இன் கீழ் இந்த அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதே நேரம் இதைப் பொதுவான அதிகாரமாக கருத முடியாது. ஒவ்வொரு தனிப்பட்ட வழக்குகள் மற்றும் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும். பிரத்தியேக அனுமதி பெற்றே இரகசிய பொலிஸார் இத்தகைய செயல்களில் ஈடுபட முடியும் என்று தெரிவித்தார். நாட்டிங்காம்ஷையர் பகுதியில் இயங்கி வந்த ஒரு கும்பலைப்பற்றி மார்க் கென்னடி என்ற இரகசிய பொலிஸ் அதிகாரி விசாரணை நடத்தி வந்தார். உண்மையை கறக்கும் நோக்கில், 2 பெண்களுடன் தவறான உறவு வைத்துக் கொண்டதாக அவர் சமீபத்தில் பேட்டி அளித்தது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.வின் பாரம் பரியச் சின்னமாக பெத்லஹேமை பிரகடனப்படுத்த கோரிக்கை!

உலகச் செய்திகள்

யேசுநாதர் பிறந்ததாக நம்பப்படும் பெத்லஹேமில் அமைந்துள்ள பிறப்பிடத் தேவாலயம் (Church of the Nativity) ஐ.நாவின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள யுனெஸ்கோவின் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


குறித்த தேவாலயம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியானது ஐ.நாவின் பாரம்பரியச் சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டால் பலஸ்தீனப்பகுதியில் முதலாவதாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகப் பெயர்பெறும்.

பலஸ்தீனத்தினாலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனம் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஐ.நாவின் யுனெஸ்கோவில் தனது அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே பலஸ்தீனம் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டது.

எனினும் இத்தேவாலயம் பாரம்பரியச் சின்னமாக பிரகடனப்படுத்தப்படுவதற்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது டி பெத்லஹேமானது மேற்குக் கரைப் பகுதியில் ஜெருசலேமிலிருந்து 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இங்கு அமைந்துள்ள பிறப்பிடத் தேவாலயம் (Church of the Nativity) உலகிலுள்ள பழைமையானதும் தொடர்ந்து செயற்பாட்டிலுள்ளதுமான தேவாலயங்களில் ஒன்றாகும். வருடந்தோறும் சுமார் 2 மில்லியன் பயணிகள் இங்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் ஒபாமாவின் நிர்வாகம் தோல்வி



அமெரிக்கப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் பராக் ஒபாமாவின் நிர்வாகம் தோல்வியடைந்துள்ளதாக மிட் ரொம்னி குற்றஞ்சாட்டியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள இரண்டு பிரதான வேட்பாளர்களும் தீவிரமான தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர். ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் குடியரசுக கட்சியின் வேட்பாளர் மிட் ரொம்னி ஆகியோர் தமது எதிர்காலத் திட்டம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் எதிர்காலத் திட்டங்களை தடங்கல்கள் இல்லாமல் கொண்டுசெல்வதற்கான ஒரு வாய்ப்பாக மக்கள் இந்தத் தேர்தல்களை பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி பராக் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பராக் ஒபாமா மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட கருத்துக்கணிப்புக்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



கொலம்பியாவில் இறந்து ஒதுங்கிய டொல்பினுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

# விக்கிலீக்ஸ் ஸ்தாபகரின் மேன்முறையீட்டு மனு நிராகரிப்பு



இங்கிலாந்தில் இருந்து நாடு கடத்தப்படுவதற்கு எதிராக விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ்சினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு பிரித்தானியாவின் உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

7 நீதியரசர்கள் கொண்ட குழுவால் இந்த மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் சில நடவடிக்கைகளுக்காக 2 வார கால அவகாசம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ் மீது பாலியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து, அவரை சுவீடனுக்கு நாடு கடத்துமாறு கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

அமெரிக்க அரசாங்கத்தின் இராஜதந்திர தகவல்களை வெளியிட்டுவரும் விக்கிலீக்ஸ் இணையத்தளம் பாரிய சர்ச்சைகளை தோற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் கட்டாயக் கருக்கலைப்பு

சீனாவில் ஒரு பெற்றோருக்கு ஒரு குழந்தை திட்டத்தால் வலுக்கட்டாயமாக நடைபெறும் கருக்கலைப்பு தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளது. சீனாவின் சாங்க்ஷி மாகாணத்தின் ஒரு கர்ப்பிணி பெண்ணுக்கு பிறக்கவிருந்தது இரண்டாவது குழந்தை என்பதால் 7 மாத குறைநிலையில் அவர் கட்டாய கருக்கலைப்புக்கு உள்ளானார். இறந்த குழந்தையின் உடலுடன் அவர் அருகில் படுத்திருக்கும் காட்சிகளை புகைப்படமாக்கிய ஒரு சமூக ஆர்வலர் இணையத்தில் வெளியிட்டுள்ளார்.

இது சீன மக்களிடமும் பிறநாடுகளிலும் சீனாவின் ஒரு குழந்தை திட்டம் தொடர்பில் கடும் அதிருப்தியை சம்பாதித்துள்ளது.

# மக்கள் தொகை, நுகர்வு கலாசாரம் "புதிய அணுகுமுறை வேண்டும்"

நிலைக்கக்கூடிய வளர்ச்சி தொடர்பில் பிரசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் ஐ.நா. உச்சி மாநாடு எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், உலகில் மக்கள்தொகை அதிகரிப்பையும், நுகர்வுக் கலாசார அதிகரிப்பையும் கட்டுப்படுத்துவது தொடர்பாக உலக நாடுகளின் தலைவர்கள் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என சர்வதேச அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வு மையங்கள் ஒன்றாகக் குரல்கொடுத்துள்ளன.

மக்கட் தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது, நுகர்வுக் கலாசாரப் போக்கை சீர்செய்வது ஆகிய இரண்டு விஷயங்களையும் உலக நாடுகள் புதிய கோணத்தில் மீண்டும் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் இந்தக் கோரிக்கைப் பிரகடனத்தின் பொதுவான செய்தி என இந்தப் பிரகடனத்தை இயற்றும் குழுவுக்கு தலைமை ஏற்றிருந்த ஒக்ஸபோர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் சார்ல்ஸ் கொட்ரே தெரிவித்துள்ளார். இந்த இரண்டு விவகாரங்களும் உலகில் சுற்றாடலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்த இரண்டின் விளைவாகவும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு அதிகமாகிக் கொண்டே போகிறது என்று விஞ்ஞான ஆய்வு மையங்கள் எச்சரிக்கின்றன. உலக முன்பில்லாத அதிக அளவில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்றன. செல்வந்த நாடுகள்தான் இந்த அதீத நுகர்வுக்கு பெரும்பங்கில் காரணமாக அமைந்துள்ளன.

உலகில் மிகவும் ஏழைகளாக இருக்கின்ற நூறு கோடி பேருக்கு போதிய உணவும், குடிநீரும், எரிசக்தியும் கிடைக்க வேண்டுமாயின், உலகின் செல்வந்த நாடுகள் தாங்கள் பயன்படுத்துகின்ற இயற்கை வளங்களின் அளவை குறைத்துக்கொள்ள வேண்டும் என இந்தப் பிரகடனம் வாதிடுகிறது.

# வடக்கின் எதிர்கால அபிவிருத்தி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் களத்தில்



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்வரும் காலங்களில் வடக்கின் அபிவிருத்திப் பணிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் என்று பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினதும் சிப்பற்கோவிற்குமான பணிப்பாளர் விஜிய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின ஐம்பதாவது ஆண்டு நினைவு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை நிகழ்வில் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்காலத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் சிப்றகோவையும் இணைக்கத் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தார். முன்னதாகக் காலை 7.30 மணிக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டியதான பூசை வழிபாடுகள் நல்லூர்க் கந்தசாமி கோயிலில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்தில ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிப்ற்கோ ஆகியவற்றின் பணிப்பாளர் விஜயகுணவர்த்தன, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பணிப்பாளர் பந்துல சமன்குமார, சந்தைப் படுத்தல் முகாமையாளர் சமிந்த சமரகோன் வடமாகாண பிராந்திய முகாமையாளர் சன்முகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக இவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களினால் வழங்கப்பட்டது.

வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகிய பயிற்சிப் பட்டறை ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் சமிந்த சமரக்கோன் உரையாற்றுகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஐம்பது ஆண்டுகளில் இருபது வீத வளர்ச்சியைக் கண்டிருப்பதுடன் 80 சதவீதம் மக்களுக்கு சேவையாற்றியிருப்பதாகவும் குறிப்பிட்டார். தற்போது இலாபமீட்டிவரும் மிகப்பெரும் நிறுவனமாக அது திகழ்வதாகவும் அதன் பணிகள் வடக்கில் விஷ்தரிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பணிப்பாளர் பந்து லசமன்குமார, வடபிராந்திய முகாமையாளர் சண்முகாநந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். மேலும் வடமாகாணப் பெற்றோலியக் கூட்டுத்தாபன மற்றும் ஒப்பந்த நிறுவனப பணிப்பாளர்கள் ளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (பா)

# இந்து ஆலயங்களில் திருட்டு 4 பேர் பொலிஸ் வலையில் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

கோவில் விக்கிரகங்களையும் வாகனங்களையும் திருடிய 4 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொண்டலடிப் பிள்ளையார் கோவில் மற்றும் கொண்டலடி வைரவர் கோவிலில் கடந்த 4 ஆம் திகதி ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா பெறுமதியான குதிரைகள், சிங்கங்கள் போன்ற வாகனங்கள் திருடி முல்லைத்தீவிற்கு ஹன்டரில் கொண்டு சென்றுள்ளனர். முல்லைத்தீவில் வைத்து குறித்த 4 நபர்களும் முல்லைத்தீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 4 பேரும் 13 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பேரில் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் இராசாவின் தோட்டம் பகுதியையும், இருவர் நீராவியடிப பகுதியையும் சேர்ந்தவர்களாவர். கோவில் விக்கிரகங்கள் மற்றும் கோவில் வாகனங்கள் திருட்டுச் சம்பவத்துடன் 6 பேர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இதில் 4 பேர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட வேளை, யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை, முதலாம் சந்தேகநபர் மற்றும் ஹன்டர் வாகன சாரதியைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு உத்தரவிட்டார். ஹன்டர் வாகனம் மற்றும் கோவில் குதிரை, சிங்கம் போன்ற பொருட்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# புலிகள் தொடர்பாக விழிப்புணர்வு வேண்டும்

## ஐரோப்பிய நாடுகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

ஐரோப்பாவின் பல பகுதிகளிலும், விடுதலைப்புலிகளும், அவர்களது ஆதரவு அமைப்புக்களும் தொடர்ச்சியாகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் எனவே இவர்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்கவேண்டும் என ஐரோப்பிய நாடுகளுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியப் பேரவையின் தலைவர் ஹர்மன் வான் ரொம்புவை சந்தித்தவேளை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

இந்தச் சந்திப்பின்போது போரின் பின்னரான இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி பணிகளுக்கு மேற்குலக நாடுகள் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளை வழங்கவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் யுத்த வலயத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்துள்ளார்.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு, நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல், உயர்பாதுகாப்பு வலயங்கள்போன்றன குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## கண்டனம்,...

இது தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையை வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரின் வீட்டின் மீதான தாக்குதல் போன்ற வன்முறைக் கலாசாரம் தொடராமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும். அதுவரை மருத்துவருக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டம்...

சமநிலையாக கையாளப்பட வேண்டும். பொதுநலவாய வர்த்தக பேரவையின் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராபஜபக்ஷ ஆற்றவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை குறித்து பிரித்தானிய உயர் ஸ்தானிகர் பதிலளிக்கையில், இந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை அரசாங்கத்தின் தீர்மானமல்ல.

பொதுநலவாய வர்த்தக பேரவை என்பது சுயாதீனமானது. ஆர்ப்பாட்டத்திற்காக பெரும் எண்ணிக்கையான பொலிஸாரை ஈடுபடுத்துவதானது நகரில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமென கவனமாக ஆராய்ந்தபின் னரே பொதுநலவாய வர்த்தக பேரவை ஜனாதிபதி மகிந்தவின் உரையை இரத்துச் செய்வதென்ற தீர்மானத்தை மேற்கொண்டது. அத்தீர்மானத்தை நாம் மதிக்கிறோம் என அவர் கூறினார்.

## சந்தேகநபரான...

சமுகமளித்திருந்தனர். இவர்களில் முஸ்லிம் பெண்களும் காணப்பட்டனர் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜோய் மகிழ் மகாதேவா சந்தேகநபரை பிணையில் விடும்படி கோரினார். இதனைப் பாதிக்கப்பட்ட இளம் பெண்ணின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் கடுமையக ஆட்சேபித்தார். சந்தேகநபரைப் பிணையில் விடுவித்தால் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்திற்கும், சாட்சிகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்பதால் அவரைப் பிணையில் விடக்கூடாது என நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அத்துடன் மகளிர் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் பலருக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடப்படுவதாகவும் சட்டத்தரணி நீதவானின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் சந்தேகநபர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 22 ஆம திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

## கியூபா...

நிறுவகத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகவுள்ளது. இந்த உடன்படிக்கையின்படி, இலங்கையின் கல்வி, வேலைத்திட்டங்கள், மாநாடுகள் போன்ற தகவல்கள் பரிமாற்றிக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை இரண்டு நாட்கள் கியூபாவில் தங்கி இருக்கும் ஜனாதிபதி, அங்கிருந்து பிரேஸிலுக்கான விஜயத்தையும் மேற்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## பணிப்பாளரின்...

சம்பவம் தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை புற்றுநோய் வைத்திய நிபுணர் என் ஜெயக்குமார் வீட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக நேற்றைய தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களிடம் விசாரணைகள் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

# மீள்குடியேற்ற நடவடிக்கை இம்மாதத்தில் நிறைவுபெறாது

## பிரதி அமைச்சர் முரளிதரன் கூறுகிறார்

(கொழும்பு)

போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னர் கூறப்பட்ட யூன் 30 என்ற கால எல்லைக்குள் பூர்த்தியாக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விட சற்று தாமதமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்ற போதிலும் அவற்றை பூர்த்தி செய்ய மேலும் சிறிது காலம் தேவைப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாத காரணத்தினாலும், இராணுவ முகாம்களுக்காக இடங்கள் எடுக்கப்படும் பட்சத்தில் அதற்குப் பதிலாக வேறு இடங்களை அடையாளம் கண்டு மக்களை அங்கு குடியேற்ற வேண்டியுள்ளதாலும் இந்த சிறிய தாமதம் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார். இருந்தபோதிலும், அதற்கு பல மாதகாலம் பிடிக்கும் என்று கூறப்படுவது தவறு என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில், இறுதிப் போர் நடந்த பகுதிகளில் அதிக அளவிலான கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியுள்ளதாகக் கூறிய அவர் அங்கு விரைவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீளக் குடியேற்றப்படுவார்கள் என்றும குறிப்பிட்டார்.

## நாட்டைப்...

ரெலோ, தமிழர் விடுதலை கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளின் யாப்பில் நாட்டை பிரிப்பது தொடர்பில் ஏற்பாடுகள் உள்ளதால் அந்தக் கட்சிகளை தடைசெய்ய வேண்டும் எனக் கோரி சிங்கள தேசிய முன்னணியின் செயலாளர் ஜயந்த லியனகே உயர நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் தமது கட்சி பிரிவினையை கோரவில்லை என்றும் நாட்டைப்பிரிக்கும் வகையான எந்த விடயமும் தமது கட்சி யாப்பில் இல்லை என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதிக்கு...

மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில் இருந்து பெருமளவான தமிழ் இளையோர் இப்போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இப்போராட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு அவர்கள் போதிய கால அவகாசத்தைப் பெற்றிருந்தனர் என்பது இதிலிருந்து புலனாகின்றது

ஆனால் பிரபலம் பெற்ற ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் இந்த ஏற்பாடுகள் தொடர்பில் முன்னரே அறிந்திருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தை ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் தடுக்கவில்லை

பிரித்தானியாவில் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் இந்தப் போராட்டத்தை தடுக்க வேண்டியது ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸாரின் கடமையாகும். இத்தகைய போராட்டங்கள் எதிர்காலத்தில் பிரித்தானிய அரசாங்கம் மற்றும் அந்நாட்டு மக்களுக்கு எதிராகவும் திரும்பக்கூடும் என கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துட்ன், ஜனாதிபதியின் உரையை நிறுத்துவது தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் ஒருதலைப்பட்சமாக எடுத்த முடிவு தொடர்பிலும் கெஹலிய ரம்புக்வெல அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

# தீவக மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் இன்று முதல் பதிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கு மானிய மண்ணெண்ணெய் வழங்கப்படாமை தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பாக முக்கிய முடிவுகள் சில எடுக்கப்பட்டன.

பல பகுதிகளிலும் கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டிருந்தும் இதுவரைக்கும் தீவுப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கு இது கிடைக்கப்பெறாமை தொடர்பாக வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசாவின் (போல்) கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இவரூடாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கவனத்திற்கு கொண்டுவந்ததுடன், இவர்களூடாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரினால் நேற்றைய தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கடற்றொழில் நீரியல் வள உதவித் திட்டப் பணிப்பாளர், கடற்றொழில் பரிசோதகர் தீவுப்பகுதி தெற்கு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் இறுதியில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரினால் கடற்றொழிலாளர்களுக்கு மானிய எரிபொருள் வழங்குவதற்கான பணிப்புரை செய்யப்பட்டது.

இதன் அடுத்த கட்டமாக இன்று எரிபொருள் மானியம் சம்பந்தமான பதிவுகளை மண்டைதீவு கிராமத்திலிருந்து ஆரம்பித்து ஏனைய பிரதேசங்களையும் பதிவுக்குட்படுத்தி உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று மண்டைதீவுப் பகுதியில் பதிவுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. எனவே அனைத்து கடற்றொழிலாளர்களையும் பதிவுசெய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (85)

# சட்டவிரோத புகலிடம் கனடா எச்சரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கனடாவிற்குள் பிரவேசிக்கும் இலங்கைப்புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்நாட்டு அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் ஆபிரிக்காவின் பெனின் நாட்டில் 148 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதனைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகுகள் அல்லது கப்பல்கள் கனேடிய எல்லைக்குள் பிரவேசிப்பதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எந்த வகையிலும் இடமளிக்கப்போவதில்லை என கனேடிய குடிவரவு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# சவுதியில் சித்திரவதை 130 பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சவுதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற பணிப்பெண்களில் 130 பேர் நேற்றைய தினம் நாடு திரும்பியதாக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு பெற்றுச் சென்று அந்நாட்டு எஜாமான்களினால் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில், சவுதியிலுள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்த பணிப்பெண்களில் ஒரு தொகையினரே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இத்தொகைப் பணிப்பெண்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகமும் சவுதி அரசாங்கமும் இணைந்து மேற்கொண்டதாக அவர் கூறினார்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் பலருக்கு சம்பளம் எதுவும் கிடைக்காத நிலையிலேயே அவர்கள் நாடு திரும்பியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு சிங்கள மொழி கற்பிக்க முடிவு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு, கிழக்கு மக்களுக்கு சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஆலோசனைக்கு அமைய தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் வடபகுதியில் பணியாற்றும் தமிழ் பேசும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ளது.


இத்திட்டத்தை முதல் கட்டமாக வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக பத்து நாள் விசேட பயிற்சித் திட்டம் ஒன்றினை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புளொட் முக்கியஸ்தர் கைது

கிளிநொச்சியில் வைத்து புளொட் அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட புளொட் முக்கியஸ்தரான இவர் தற்போது வவுனியா பொலிஸ் நிலையத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் சூரியகுமார் என அறியப்பட்டுள்ளார். 2009 ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அத்துடன் புளொட் அமைப்பினைச் சேர்ந்த மேலும் பலருக்கும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது

# அனுமதியற்ற பேருந்துகளுக்கு தண்டப்பணம் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் அனுமதிப்பத்திரம் இல்லாது சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவரவுள்ளதாக தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தற்போது அறவிடப்படும் தண்டப்பணத்தை மேலும் அதிகரிப்பது மற்றும் அனுமதிப்பத்திரங்கள் இன்றி சேவையில் ஈடுபடும் வாகனங்களது உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராயப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ் - கொழும்புக்கு இடையிலான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் தொடர்பில் நேற்று முன்தினம் மாலையில், தனியார் போக்குவரத்துச் சேவை, இலங்கை போக்குவரத்துச் சேவை அதிகாரிகள் இணைந்து வத்தளை பிரதேசத்தில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது இலங்கை போக்குவரத்துச் சபையின் அனுமதிப்பத்திரம் இல்லாது சேவையில் ஈடுபட்ட மூன்று பஸ்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸ் தலைமையகம் செல்ல வேண்டியதில்லை

பொலிஸ் அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்கு பொது மக்கள், பொலிஸ் தலைமையகத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களுக்கு தேவையான அறிக்கையினை, கொழும்பு 11 ஒல்கொட் மாவத்தையின் 331 இலக்கத்தில் உள்ள பொலிஸ் கட்டடத்தில் இருந்து பெற முடியும் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு என்பனவற்றின் பிரதியுடன், 500 ரூபா கொடுப்பனவினையும் சமர்ப்பிப்பதன் மூலம் பொலிஸ் அறிக்கையைப் பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் காலை 8.30 முதல் மாலை 4.00 மணி வரையில் பொதுமக்கள் தமது கருமங்களை மேற்கொள்ள முடியும் எனவும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 011 2422 994 என்ற தொலை பேசி இலங்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முறை தவறிய வர்த்தகம் 32 வர்த்தகர் மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினால் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது 32 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி ந.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

சுண்டுக்குளி, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் 32 வர்த்தகர்களுக்கு காலாவதியான பொருட்கள், விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமல் விற்பனை செய்தமைக்காக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் பொருளாதாரம் வளரும் என்கிறது ஐ.எம்.எப்.

நாணயத்தின் பெறுமதி குறைவடையும் நிலையிலும் இலங்கையின் பொருளாதாரம் மேம்படுவதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியாக நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்து வருவதனால் நாணயத்தின் பெறுமதி ஸ்திரதன்மையற்ற நிலையில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த தகவல்களை சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவின் தலைவர் தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த பொருளாதார திட்டத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் அதிகளவில் செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# வெளிநாட்டுப் பட்டப்படிப்பு மோசடி சந்தேகநபருக்கு விளக்கமறியல்

வெளிநாட்டுக்குப் பட்டப்படிப்புக்கு அனுப்புவதாகக் கூறி பல இளைஞர்களிடம் பணமோசடி செய்த நபர். மேலும் இரண்டு வழக்குகளுக்காக, நேற்று யாழ். நீதவானால் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

மேலும் பல பணமோசடி வழக்குகளில் ஏற்கனவே இவர் விளக்கமறியலில் இருந்து வருகின்றார். யாழ், திருநெல்வேலி, பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கண்மையில் வெளிநாட்டுப பட்டப்படிப்புக்கள் கல்லூரி என நிறுவனம் ஒன்றை அரம்பித்து பல இளைஞர், யுவதிகளிடம் இலட்சக்கணக்கில் பணத்தை வாங்கி மோசடி செய்ததாக இவர் மீது பொலிஸ்ரால் யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இவர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினரான மொகமட் அஷ்மிகபூர் என்னும் இந்நபர் மீது யாழ். நீதிமன்றில் மேலும் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நேற்று இவ வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம், நாவலடி, அரியாலையைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் 8 இலட்சத்து 54 ஆயிரத்து 250 ரூபாவையும், அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 5 இலட்சத்து 60 ஆயிரத்து 350 ரூபாவையும் இந்நபரிடம் கொடுத்ததாகவும், அவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு தம்மை ஏமாற்றிப் பண மோசடி செய்ததாகவும் பொலிஸாரிடம் முறையிட்டதன் பேரில் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதவான் மா.கணேசராசா சந்தேகநபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்,137)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.